10வது ஆண்டில்

விளம்பரம்
VLAMBARAM

☎ (416) 282-8059
(416) 282-4978

# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 JUNE 15, 2000 பாலம் 12



❊ E-Coli வராமல் தடுக்க என்ன செய்வது? (பக். 2)
❊ சூரியனின் முதலாவது வாயு உலகம்-வியாழன் (பக்.11)
❊ வீடு வாங்க ஒப்பமிடப்பட்டதன் பின் (பக். 11)
❊ செய்யும் தொழில் தெய்வமா? (பக். 05)
❊ உடலும் உள்ளமும் ஒன்றாக என்ன செய்யலாம் (பக். 04)
❊ சாரதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தினால் (பக்.15)
❊ ASIA CUP - 2000 (பக். 06)
❊ உப்புக்கருவாடு, ஊறவைத்த சோறு.. பாடும் ரூபன் (பக். 12)





RE/MAX
Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற
Raja M. Mahendran, P. Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB

(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!
SABONA
& Gift
☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough


## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

☞ சுயநலத்தியாகம் உருவெடுத்தவள் பெண் இவ்வுயர் தன்மையைக் கடைப்பிடிக்குமளவு அவள் ஆண்மகனுக்கு என்றைக்கும் பின்வாங்கமாட்டாள்.

☞ கெட்ட செயல் என்பது எது? அச்செயலைக் குறித்துப் பிறகு மனிதன் வருந்துகிறானோ, எச்செயல் துன்பத்தையும் கண்ணீரையும் விளைவிக்கிறதோ அது தீவினை.

☞ வீட்டில் இருந்து கொண்டே ஒருவன் உலகை அறிந்து கொள்ள முடியும. மனது என்னும் ஜன்னலை அவன் முறையாகத் திறந்து வைத்திருந்தால் மண்ணுலகையும் விண்ணுலகையும் பார்க்க அவனுக்கு இயலும்

☞ கடவுள் நமக்குப் புறம்பாக எங்கேயோ இருக்கிறார் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பரியந்தம் அக்ஞான மிருக்கிறது. கடவுள் நம் உள்ளத்தில் இருக்கிறார் என்று உணரும் போது ஞானோதயமாகிறது.

☞ மனிதன் தேவர்களிலும் மேலோர். முக்தி யடைதல் மனிதற்கே சாத்தியம். முக்தி யடைதல் பொருட்டு தேவர்களும் மக்களாக மண்ணுலகில் பிறக்கின்றனர்.

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## ஈக்குடோர் (Ecuador)

தென் அமெரிக்காவில் கொலம்பியா [Colombia], பீறு [Peru], மற்றும் பசுபிக் சமுத்திரத்தினை எல்லையாகக் கொண்ட ஒரு சிறு நாடே "ஈக்குடோர்" (Ecuador) ஆகும்.

**பரப்பளவு:** 109,483 ச. மைல்கள்
**மக்கள் சனத்தொகை:** 9,996,000 பேர் (1992ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி)
**தலைநகரம்:** குயிற்றோ(Quito)
**சுதந்திரம்:** மே 24, 1822 ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் கிடைத்தது
**மொழி:** ஸ்பானிஷ், புராதன இந்திய மொழிகள்
**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர் 95%

ஜனாதிபதி, உப ஜனாதிபதி, அமைச்சர்கள் என இருபத்தியொரு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெறுகின்றது.

18-65 வயதுக்கு இடைப்பட்டவரே வாக்குரிமை

(தொடர்ச்சி 17 ம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

பெற்றோர் பிள்ளைகளை வளர்க்கும் போது அன்பையும் அத்துடன் அறிவையும் வளர்ப்பதே சாலச் சிறந்தது. அவ்வாறு வளர்க்கப்படும் பிள்ளைகளே பிற்காலத்தில் நாட்டுக்குத் தேவையான நல்ல பிரஜைகளாக உருவாகின்றார்கள். இதனையே பிள்ளைகள் வளரும் போது 'ஆளும் வளரணும் அறிவும் வளரணும் " எனப் பாடிவைத்தார்கள் போலும்.

அண்மையில் அமெரிக்காவில் எடுத்த கணக்கீட்டின்படி, பிள்ளைகளிற்கு அதிகமாக பணம் கொடுக்கும் பெற்றோர், பிள்ளைகளைத் தங்கள் காலங்களில் சொந்தமாக அதிக பணம் சேமிப்பதை தடுக்கின்றார்கள் எனவும் இதே நேரத்தில் குறைவாகப் பணம் கொடுத்து (செலவு செய்து) வளர்க்கப்படும் பிள்ளைகள் பிற்காலத்தில் அதிக பணத்தை சேமிப்பதாகவும் கண்டு அறியப்பட்டுள்ளது.

எனவே பிள்ளைகளிற்கு பணம் கொடுப்பதை விட அறிவைக் கொடுப்பதே சாலச் சிறந்தது. பிள்ளைகளிற்கான ஒரு செயலை முடித்துக் கொடுப்பதை விட, செயலை முடிப்பதற்கு வழிமுறை சொல்லிக் கொடுப்பதே தகுந்த வழி.


நல்லதைச் சிந்திப்போம்.. நல்லதே நடக்கும்.
நாளை நமதே. வெற்றி நமதே!!

-நெற்றிக்கண்ணன்

உலக தமிழோசை மூலம் ஆக்கங்கள் தருபவர்கள் பிரதி சனி தோறும் 12:15மணிக்கு CTBC இல்




SINGAPORE CELLUAR
$25.00 + Taxes 200min/Month
PAGER $5.95/Month Unlimited
$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே
CANTEL
Bell Mobility
Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378
HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (59)



-விஜே குலத்துங்கம்

அண்மையில் பத்திரிகைகள், வானொலிகள் தொலைக்காட்சி செய்திகளில் எல்லாம் முன்னுரிமை கொடுத்து வெளிவிடப்பட்ட செய்திதான் ஒன்ராரியோவில் Walkerton என்னுமிடத்தில் E-Coli என்னும் பக்டீரியா ஒன்றினால் பாதிக்கப்பட்டு ஒன்பது பேர் வரையில் இறந்ததுதான். தற்போது ஏற்பட்டுள்ள E-Coli தொற்று நோய்தான் கனடாவின் சரித்திரத்தில் உண்டாகிய E-Coli தாக்கத்தில் மிக மோசமானதாகும்.

இந்த E-Coli பக்டீரியா சாதாரணமாக இலையுண்ணும் பிராணிகளான ஆடுகள், மாடுகள், மான்கள் போன்றவற்றின் ஐந்து வீதமான விலங்குகளின் சமிபாட்டுத் தொகுதியில் காணப்படும். ஆனால் இந்த பக்டீரியாவால் அந்த விலங்குகள் பாதிக்கப்படுவதில்லை. அவை வெறும் காவிகளாகவே தொழிற்படுகின்றன. இம்மிருகங்களின் சாணத்திலும் இக்கிருமிகள் காணப்படும். இவை மனிதரின் வயிற்றுக்குள் சென்றால் அவர்கள் பாதிப்படையக் கூடும். ஆனால் எல்லாரும் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள். சிறுபிள்ளைகள் எல்லோரும் இதனால் பாதிப்படைவர்கள். வயது வந்தவர்கள் இதற்கு எதிர்க்கும் சக்தியைப் பெற்று விடுவார்கள். ஆனால் முதியவர்கள், புற்றுநோய் மற்றும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த பக்டீரியாவினால் தாக்கப்படக் கூடும்.

இந்த பக்டீரியா எப்படி மனிதரின் உடலினுள் உட்புகுகின்றது என்பதைப் பார்ப்போம். மிருகக் காட்சிசாலைக்கு செல்பவர்கள்,. மிருகங்களை கையால் தடவக் கூடும். மிருகங்கள் சிலவேளைகளில் அவற்றின் சாணத்தின் மேல் படுக்கக் கூடும். இதன் போது சாணத்தில் இருக்கும் பக்டீரியா மிருகத்தின் தோலின் மேல் இருக்கும். தடவும் பொழுது மக்களின் கைக்கு வந்துவிடும். பின்னர் அவர்களது; முக்கியமாக சிறுவர்களின் கை வாயில் பட்டால் பக்டீரியா உடலுள் சென்று விடும். கையை கழுவாமல் சாப்பிடும்போது வயிற்றுக்குள் செல்லலாம். நமது தாயகத்தில் கிராமப் புறங்களில் சாணத்தால் மெழுகிய வீட்டில் வசிக்கின்றார்கள். அப்போது அவர்களை பக்டீரியா தாக்கமாட்டாதா என்ற கேள்வி எழலாம். முதலாவதாக குறிப்பிட்ட மாட்டின் வயிற்றுள் பக்டீரியா இருக்கவேண்டும். எல்லா மாடுகளின் வயிற்றிலும் இருக்கமாட்டாது. மேலும் அந்த சூழ்நிலையில் சிறுவயதில் இருந்தே சுத்திகரிக்கப்படாத நீரை மக்கள் அருந்தி வருவதால் இயற்கையாக அவர்களுக்கு எதிர்க்கும் சக்தி வந்துவிடும். ஆனால் நகர்புறங்களில் அல்லது வெளிநாட்டில் இருந்து செல்பவர்கள் இலகுவில் பாதிக்கப்படலாம். இதனால்தான் இங்கிருந்து இந்தியா போன்ற நாடுகளுக்கு செல்பவர்களுக்கு குடிதண்ணீர் பற்றி கவனமாக இருக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் நோய்க்கிருமிகள் உள்ள சாணங்கள் மரக்கறிகளுக்கு பசளையாகப் பாவிக்கப்படுகின்றது. அதன்போது இலைகளில் சாணம் பட சந்தர்ப்பம் உண்டு. Lettuce, கோவா போன்ற இலை மரக்கறிகள் பச்சையாக சலாட் தயாரிக்கும்போது உபயோகிக்கப்படுகின்றது. அதை சாப்பிடும்போது பக்டீரியாக்கள் வயிற்றினுள் செல்லக்கூடும். இலையான்களும் சாணத்தில் மொய்த்து விட்டு பின்னர் திறந்துள்ள உணவுப் பண்டங்களில் வந்து அமரும்போது பக்டீரியாக்களை காவிச் செல்லக்கூடும். இதன் மூலமும் பக்டீரியா பரவலாம். எனவே உணவுப் பண்டங்களை திறந்து வைப்பதோ, இலையான்களை வீட்டினுள் வராமல் தடுப்பது மிகவும் அவசியம்.

வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது, கிருமிகளை உடைய சாணத்தை, வெள்ளநீர் கரைத்துச் சென்று நீர்த் தேக்கங்கங்கள், ஏரிகள் குளங்களில் சேர்த்து விடுகின்றது. பல இடங்களில் ஏரிகள் போன்றவற்றில் இருந்துதான் குடிநீர் பெறப்படுகின்றது. குழாய்கள் மூலம் வீடுகளுக்கு இந்தக் குடிநீர் செல்கின்றது. இப்படிச் செல்லும் நீர் சரியான முறையில் சுத்திகரிக்கப்படாவிட்டால், நோய் பரவும் அபாயம் ஏற்படும். அண்மையில் நோய்பரவிய Walkerton என்ற இடத்தில் கிணறுகள் மூலம்தான் குடிநீர் எடுக்கப்பட்டு அங்கிருக்கும் வீடுகளுக்கு குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. ஒன்டாரியோவின் தெற்குப்பகுதியில் மேமாதம் 12ந் திகதி பெரும் மழைபெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதன்போது கிருமிகள் உள்ள சாணம் கரைக்கப்பட்டு ஏதாவது ஒரு வழியில் கிணற்று நீரினுள் அவை சென்றிருக்கக் கூடும். சாணம் கரைந்த நீர், கீழேவடிந்து சென்று பக்கப்பாடாக வெடிப்புகள் மூலம் கிணற்றிற்குள் சென்றிருக்க வாய்ப்புண்டு.

தற்போது அங்கு தாக்கியுள்ள E-Coli பக்டீரியாவின் முழுப்பெயர் EScherichia Coli ஆகும். இதனின் ஒரு மோசமான Strain An E-Coli 0157-H7 என்ற இனமே Walkerton ஐ தாக்கியுள்ளது. இந்த பக்டீரியா Vera-Toxin என்ற நச்சுப் பொருளை உண்டாக்கும். இந்த நச்சுப்பொருள் முதலில் சிறுகுடலிலுள்ள இரத்தக் குழாய்களை தாக்கும். இதனால் இரத்தம் சேர்ந்த வயிற்றோட்டம் ஏற்படும். சிலசந்தர்ப்பங்களில் இந்த Toxin ஆனது சிறுநீரகத்தின் இரத்தக் குழாய்களையும் தாக்கும். இதனால் சிறுநீரகம் தொழிற்படாமல் விற்டுவிடும். பலமாக தாக்கப்படும் நிலையில் ஈரல், இருதயம் போன்ற உறுப்புகளும் தாக்கப்பட்டு மரணம் ஏற்படலாம்.

E-Coli தாக்கியதற்கான அறிகுறிகளாவன கடுமையான வயிற்றோட்டம், வாந்தி, காய்ச்சல் போன்றவையாகும். முக்கியமாக இரத்தம் சேர்ந்த வயிற்றோட்டம் ஏற்பட்டால் E-Coli இன் தாக்கம் எனக் கருதலாம். வீடுகளில் வரும் சாதாரண குடிநீர் குளோரீன் சேர்க்கப்பட்டு வருவதால் கிருமிகள் அகற்றப்பட்டு வரும். நாங்கள் சுகாதாரமான பழக்க வழக்கங்களை கையாண்டால் நோய் வராமல் தடுக்கலாம். அடிக்கடி கைகளை கழுவும் பழக்கத்தை கொண்டிருக்க வேண்டும். முக்கியமாக வீட்டற்கு வெளியே பொது இடங்களுக்கு சென்று வந்தவுடன் கைகளை கழுவுவது நன்று. அத்துடன் வாய், தொண் போன்றவற்றை Mouth Wash எனப்படும் வாய் கழுவும் நீரால் ஒரு நாளுக்கு இரண்டு மூன்று தடவை கழுவுதல் வேண்டும்.

இதன் மூலம. தடிமன், இருமல் போன்ற வியாதிகள் ஏற்படாமலும் தடுக்கலாம். சுத்தமான இடங்களில் மட்டும் தான் உணவுப் பண்டங்களை வாங்க வேண்டும். முக்கியமாக இந்தியா போன்ற நாடுகளுக்கு செல்லும்போது உணவு குடிநீர் போன்றவற்றில் கவனம் எடுக்க வேண்டும். கரட் மற்றும் Salad க்கு பாவிக்கும் பச்சையாக உண்ணும் மரக்கறிகளை நன்கு கழுவவேண்டும்.

சுத்தம் சுகாதாரம் போன்வற்றை சரியான முறையில் பேணிக்கொண்டால் E-Coli மாத்திரமல்ல, மற்ற தொற்றுவியாதிகளும் ஏற்படாமல் தடுத்துக் கொள்ளலாம்.

**********************************************************


*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*

11 வருடங்களாக தமிழர் மத்தியில்

**யோகாஸ்**

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 108



### இடமிருந்து - வலம்

1. புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வான்கலம்
4. நிற்பாட்டு
5. வீட்டிற்கு கூரைபோட உபயோகிக்கப்படுவ
6. நான்கு யுகங்களில் தற்போது நடப்ப
9. வரவேற்பு மேசையில் இருக்கும் ம சின்னம் ஒன்று
10. குழந்தை (வல-இட)
11. நிறைவேற்று (வல-இட)

### மேலிருந்து கீழ்

1. சூரியன் வடக்கு நோக்கி நகர்வதாக தோன்றும் காலம்
2. வாசனை புகைபோட உபயோகிக்கப்படுவது ஒரு மரத்தின் பிசின்
3. களவு எடு
5. ஒத்துக்கொள்
7. ஒரு எண்ணின் மூன்று அடுக்குகள்
8. துப்பல்
12. மனிதனின் பரந்த பின்புறம் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் **JUNE 27, 2000**க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | ய | க் | க | ச் | சி | | ம் |
| தி | | | ண் | | ந் | | ட |
| கா | | | டி | | தூ | க் | கு |
| ச | ஞ் | சி | கை | | ர | | ம |
| ம் | | த் | | அ | ம் | பு | |
| | ஆ | தி | | னு | | ப் | |
| ஈ | | ர | | ப | | று | ஈ |
| கை | | ம் | ட | வி | ற்ற | உ | |

**#107 இல் வெற்றி பெற்றோர்**

1) W. Tarmalingam, Toronto, Ont.
2. கம்சவேணி மணிமாறன், North York, Ont.

*இலங்கை, இந்திய, கனேடிய உணவு பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மா மீன், கணவாய் மற்றும் சகல விதமான உண பொருட்களுக்கும் நாடுங்கள்*

**YARLCAN**
**STEAM CLEANING**



உங்கள் சகலவிதமா
**Cleaning**
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

**Tel: 724-9085**
**Pager : 600 -0335**
**Cell: 721-9709**

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple




## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## வாகனம் வாங்குபவர்களது சில கேள்விகளும் அதன் பதில்களும்?



இங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் எனது வாகன (கொண்டா (Honda) இல்) விற்பனையாளராக பணியாற்றுவதால் கிடைத்த அனுபவ அறிவுகளைக் கொண்டதே தவிர வேறொன்றும் இல்லை.

**1. வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களை எப்படிக் குறைந்த விலையில் பெறுவது?**

**பதில் -** நீங்கள் வைத்திருக்கும் வாகனத்தை பொறுத்து நீங்கள் அதற்குரிய உதிரிப்பாகங்களை வாங்கும் இடங்களைத் தீர்மானிக்கலாம். பழைய வாகனக்காரர்கள் Canadian Tire இல் 90%மான உதிரிப்பாகங்களை வாங்கலாம். Dealer இடம் வாங்குபவர்கள் உங்கள் உதிரிப்பாகங்களுக்கு குறைந்தது 10 அல்லது 15% மாவது அவர்களின் விலையில் இருந்து குறைத்து வாங்கமுடியும். நீங்கள் கேட்காமல் கிடைக்கப்போவதில்லை. அவர்கள் குறைக்காது விட்டால் அடுத்த Dealer இடம் போய் வாங்குங்கள். உங்கள் வாகனத்தின் Tire ஐ மாற்ற வேண்டுமாயின் எந்தநேரத்திலும் Dealer இடம் போகாதீர்கள். Canadian Tire அல்லது Wal-mart இல் மலிவாக கிடைத்தாலும் மிகச் சிறந்த Tire என்று சொல்வதற்கு இல்லை. Tire மட்டும் விற்க்கும் கடை-களான Goodyear போன்றவற்றில் பலவகையான தரத்திலுள்ளதை உங்களால் தெரிவு செய்யக்கூடியதாக இருக்கும். அங்கும் அவர்களின் விலையில் குறைத்து கேட்டுப்பாருங்கள். அடுத்ததாக Starter அல்லது Alternate வாங்கும் போது Rebuilding செய்யும் இடங்களை yellow Page இல் பார்த்து அறிந்து மிகமிக குறைவான விலையில் வாங்க முடியும். உதாரணத்திற்கு $150 க்கு Canadian Tire இல் வாங்குவதை உங்கள் பழையதை அவர்களிடம் கொடுத்து விட்டு '$75க்கு Rebuild பண்ணுபவர்களிடம் பெறமுடியும். Auto Parts என்று yellow Page அல்லது தமிழர் மத்தியில் பார்ப்பதன் மூலம் உதிரிப்பாகங்கள் விற்கும் இடங்களை கண்டறிந்து விலைகளை விசாரிப்பதன் மூலம் குறைந்த விலையில் பெற்றிக் கொள்ள முடியும்.

**2. எனது புதிய வாகனத்தை கட்டாயமாக Dealer இடம் தானா Service க்கு கொண்டு செல்ல வேண்டும்?**

**பதில் -** கிடையவே கிடையாது. வாகனம் விற்கும் Dealers உங்கள் வாகனத்தை நீங்கள் அவர்களிடம் Service க்கு கொண்டு போகும் போதுதான் பெரிய அளவில் உங்களிடம் இருந்து பணத்தை சம்பாதிக்கின்றனர் என்பதை பலமுறை நான் பலருக்கு எடுத்துக்கூறியும் பலருக்கு அது விளங்குவதாக இல்லை. நீங்கள் Oil Change க்கு எல்லாமாக குறைந்தது $35 அல்லது $40 Dealer இடம் கொடுத்துச் செய்வது, அதே oil change ஐ ஒரு தமிழ் சகோதரனின் வாகனந் திருத்தும் இடத்தில் $20 அல்லது $25க்கு சிறந்த முறையில் செய்யக் கூடியதாக உள்ளது. இது ஒரு உதாரணம். ஒரு சிறிய வேலையான oil change இலேயே $15 வித்தியாசம் என்றால் பெரிய வேலைகளைக் கேட்கவுமா வேண்டும்? நீங்கள் நினைக்கக் கூடும் உங்கள் வாகனத்தை Dealer Service க்கு கொண்டு போகும் போது Warranty க்கு நல்லம் என்று எந்த Dealers இன் service computer களும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு அற்றவை.

ஆகவே நீங்கள் இம்முறை அதேஇடத்தில் Service செய்யாமல் வேறு இடத்தில் செய்திருப்பின் அவர்களின் computer இல் நீங்கள் இம்முறை Service செய்யவில்லை என்று தான் தோன்றும். நீங்கள் வேறு dealer இடம் செய்த பத்திரத்தை தவறவிட்டால் நீங்கள் செய்தவற்றுக்கு எந்த அத்தாட்சியும் கிடையாது. ஆகவே warrenty என்ற மாயையை மனதில் இருந்து அகற்றுங்கள்.

*மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** Cell (416) 704 -1179*


## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**


**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

Contact: Sivabalan — சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

51 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough



# ஆரோக்கிய வாழ்வு (59)

- *N.* செல்வசோதி

## டென்சன் நீங்க (Tention) தியானம் அவசியம் (Meditation)

தன்னை அறிந்து கொள்ளவும் பரப்பொருளின் அருள் கிடைக்கவும் தியானம ஒரு சாதனமாக எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. கடவுளே இல்லை என்று வாதிடுபவர்களும்கூட தியானத்தை மன அமைதிதரும் ஒன்றாக ஒப்புக் கொள்கின்றனர்.

தியானம் செய்வதற்கு இனமத, வயது வேறுபாடுகள் பற்றி தடையே இல்லை. எவர் வேண்டுமானாலும் தியானப் பயிற்சியில் ஈடுபடலாம். எல்லா இனத்தவரும் தியானப் பயிற்சி செய்கின்றபோதும் அதன் செய்முறையில மாற்றம் காணப்படுகிறது. மனோதத்துவ சாத்திரத்தின்படி மனோ வியாதிகளைக் குணமாக்குவதற்கு தியானமே தலைசிறந்ததென்று உணரப்பட்டுள்ளது.

தியானத்தின் உள் அர்த்தங்களை விளக்குவதில் நவீன விஞ்ஞானம வெற்றியடைந்துள்ளது. சாதாரணமாக மனிதன் அறியமுடியாத மன ஆழத்தை ஊடுருவிப் பார்த்ததில் பெறப்பட்ட செய்திகளால் மனோவசிய நிபுணர்கள எம்மை ஆச்சரியப்படுத்துகின்றனர்.

### உடலும் உள்ளமும் (Body & Mind)

தினமும் ஒரு சில நிமிடமாவது தியானம் பழகிவருகையில் நாளடைவில் மனத்தின் ஆற்றல் அதிகரித்துச் செல்கின்றது. இதிலிருந்து கிடைக்கும் மன அமைதியையும் ஆனந்தத்தையும் அளவிடமுடியாது

இதைவிடுத்து உடல் அனுபவிக்கும் இன்பங்களும் புறக் கொண்டாட்டங்களும் நமக்குத் தரும் இன்பம் தற்காலிகமானது. இது அனைவரும் அறிந்ததே.

### சந்தோசம் என்பது என்ன?

சாதாரண மனிதனைப் பொறுத்தமட்டில் அது அவனது மனதில் ஏற்படும் திருப்தியாகவே இருக்கிறது. ஒருவனுடைய சந்தோசத்தையோ அல்லது துக்கத்தையோ நிர்ணயிப்பது அவனுடைய மனத்தின் நிலைதான். ஒருவன சந்தோசமடைவதற்கு அவனது உடலும் மனமும் இணைந்து வேலை செய்யவேண்டும். இவ்வாறு உடல் மனம் ஆகியவற்றின் ஆரோக்கிய நிலையே சந்தோசத்தை அடைவதற்கான இன்றியமையாத நிபந்தனை - உடலும் மனமும் ஒன்றோடு ஒன்று இணைவதால் மன ஆரோக்கியத்திற்கு உடலும், உடல் ஆரோக்கியத்திற்கு மனமும் காரணமாக உள்ளது.

இதிலிருந்து நாம் ஒன்றை விளங்க வேண்டும். உடல் மனத்தைப் பாதிக்கும் அளவைவிட மனம் உடலைப் பாதிக்கும் அளவு அதிகம். அதாவது உடலின் மேல் மனம் செலுத்தும் ஆதிக்கம் பழைய காலத்து ஞானிகள் முதல் நவீன மருத்துவ ஆராய்ச்சியாளர்வரை அனைவராலும் அறியப்பட்டுள்ளது.

ஆனந்தமாக இருப்பதற்கு ஆரோக்கியமான மனமே காரணம். அதை விடுத்து மனத்தை உடலின் இச்சைப்படி நடக்கத் தீர்மானித்தால் தீமைகளும் தொல்லைகளும் தான் இறுதியில் மிஞ்சும்

அடுத்த இதழில் தியானம் பற்றிய விளக்கத்தின் உடல் - உள்ளம் - ஆனந்தம [Body - Mind - Happyness] என்ற பதத்தைப் பற்றி ஆராய்வோம்.

அடுத்து Meditation Technique பற்றி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.


**Neelam SILK**

**நீலம் சில்க்**

2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'

**உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**

- முகூர்த்தப்பட்டு புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



**புதிய வெளியீடுகள்**

மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

'நீலம் சில்க்'

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)

CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484



Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422

CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235

**COMPUSERVICE International**

COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
(905) 432-2422

REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
*FAX: (416) 431-5828

Email: compuservice@compuserviceint.net
web: www.compuserviceint.net


## உங்களுக்குத் தெரியுமா?

* முதன் முதலில் பூமியைச் சுற்றி வந்த செயற்கைக் கோள் எது? ஸ்புட்னிக் (Sputnik) -1
* முதன்முதலில் வானைச் சுற்றியவர் என்ற பெருமைக்குரியவர் யார்? யூரிகாகரின்
* பாராசூட்டைக் கண்டு பிடித்தவர் யார்? ஜாக்ஸ் கார்னரின்
* வானில் நடந்த முதல் மனிதர் யார்? எட்வர்ட் எச். வொய்ட்
* ஆகாயக் கப்பலில் நிரப்பப் படும் வாயு எது? ஹைட்ரஜின் (அஹிலியம்)
* விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் யார்? ராகேஷ் சர்மா
* ஏவூர்தி புறப்படும் பொழுது எரிபொருள் எரிக்கப்படும் வெப்பநிலை என்ன? 2000டிகிரி சென்ரிகிரேட்
* "NASA" என்பதன் விரிவென்ன? National Aeronautics & Space Administration
* கொம்பியூட்டர் ஆணைத் தொடரில் (Flow Chart) ஒரு காற்கோடு (Hypen) விடுபட்டதால் விண்ணிலே வெடித்துச் சிதறிய விண்வெளி ஓடம் எது? 1962 ஏவப்பட்ட மாரினர்-1
* அமெரிக்க விண்வெளி நிறுவனத்தின் பெயர் என்ன? "நாசா" (NASA)

*** உலகில் 2000 ஆம் ஆண்டில் ஆகக் கூடுதலான செலவுள்ள முதல் மூன்று நகரங்கள்**

1. கொங்கொங் (Hong Kong)
2. பாரிஸ் (France)
3. ரோக்கியோ (Japan)

***ஆகச் செலவு குறைந்த நகரங்கள்**

1. மெக்சிக்கோ நகரம் (Mexico)
2. மன்ரின்லூப்பா (Philippines)
3. ஜகாற்ரா (Indonesia)

* 1864 ஆம் ஆண்டு கனடாவின் முதலாவது Royal Bank ; Merchant Bank என்ற பெயரில் Halifax இல் இயங்கத் தொடங்கியது
* 19ஆம் நூற்றாண்டில் வங்கியின் முகாமையாளர்களிற்கு துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டது
* 1961ஆம் ஆண்டு றோயல் வங்கி முதலாவதாக கொம்பியூட்டரை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. (IBM 1401)
* சூரியக் குடும்பத்திலேயே ஒளி மிகுந்த கோள் எது? வீனஸ்
* "இரவும், பகலும்" சரியாக உள்ள நாட்கள் எவை? மார்ச் 21, செப்டெம்பர் 23


## ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்...



### செய்யும் தொழிலே தெய்வம்

மனித வாழ்க்கை அன்று முதல் இன்று வரை செய்யும் தொழிலுடன் ஒன்றி இருப்பதன் காரணம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றிற்கு செய்யும் தொழிலே வழி வகுப்பதேயாகும். பொதுவாக இறைவனில் அல்லது தெய்வத்தில் நம்பிக்கை வைத்துள்ள பெரும்பான்மையான மக்கள் இந்த மண்ணில் மனிதனுக்கு வேண்டிய அனைத்தையும் தெய்வமே கொடுப்பதாக நம்புகின்றனர். தெய்வம் கொடுக்கின்றதோ இல்லையோ ஆனால் வேலை செய்து கிடைக்கும் ஊதியத்தில் மனிதனுக்கு வேண்டிய அத்தியாவசியங்களை மனிதனால் நிறைவேற்றக் கூடியதாக இருப்பதனால் அந்த ஊதியத்தை கொடுக்கும் தொழிலை தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்படுகின்றது அல்லது மதிக்கப்படலாம் என்பதே எனது எண்ணம் ஆகும்.

செ[illegible]மாக தொழில் செய்தாலும் சரி அல்லது தொழிற்கூடங்களில் கிடை[illegible]கும் வேலைகளை செய்தாலும் சரி செய்யும் வேலைகளில் முழுக் கவனத்தையும் செலுத்தி மிகுந்த பொறுப்புணர்வுடன் செய்யும் தொழிலை செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். மனதிற்குப் பிடித்தமான தொழிலை செய்வதற்கு ஒருவர் தனிப்பட்ட முறையில் முயற்சி செய்து அதற்கு வேண்டிய வழிவகைகளை சரியாக கடைப்பிடித்தால், உதாரணமாக பிடித்த மான தொழில் துறையில் கல்விபயின்று தொழிற்பயிற்சி செய்து கொள்வதன் மூலம் அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களை அதிகரித்துக் கொள்ளலாம். ஆனால் விரும்பிய தொழிலை செய்வதற்கு எல்லோருக்கும் சந்தர்ப்பம் கிடைத்து விடுவதில்லை. எவ்வளவு முயன்றும் வேண்டிய தொழில் கிடைப்பதும் இல்லை. ஆனால் மனம் தளர்ந்து விடாமல் உணவு, உடை, உறைவிடம் கிடைக்க கூடிய வகையில் ஊதியத்தை பெறக்கூடிய முறையில் கிடைக்க கூடிய வேலைகளில் சேர்ந்து நேரம் தவறாமல் ஒழுங்காக சென்று கடினமாக உழைப்பதால் பலன் கிடைக்கும்.



தொழிற் கூடங்களில் கிடைக்கும் வேலைகளில் செய்பவர்களை விட விரும்பிய தொழிலை தமது கடின உழைப்பால் சேமித்த பணத்தை சொந்தமாக முதலிட்டு தொழில் செய்பவர்கள் தாம் செய்யும் தொழில் துறையில் வேண்டிய அறிவையும் அந்த தொழில் பற்றிய அனைத்து விபரங்களையும் அறிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம். எனக்கு தெரிந்த ஒருவர் அந்த தொழிலை செய்கிறார் நன்றாக தொழில் நடக்கின்றது. அவர் தொழில் செய்யும் இடத்திற்கு பல முறை போய் வந்திருக்கின்றேன். பெரிய கடினமாக வேலை இல்லை போல் தெரிகின்றது. வேண்டிய முதலும் அவ்வளவாக தே[illegible] இல்லை. முதலுக்கு கொஞ்சம் பணம் இருந்தால் போதும் என்று அ[illegible] தொழில் பற்றிய முழுமையான அறிவை வளர்த்துக் கொள்ளாமல் மற்றவர் ஒருவர் செய்கின்றார், தொழில் நன்றாக நடக்கின்றது. நாங்களும் செய்யலாம் என்று ஒரு தொழிலில் இறங்கி, ஆழம் தெரியாமல் காலை விட்ட கதையாக முதலுக்கே மோசம் போனவர்கள் பல பேர். ஆனால் மற்றவர் செய்யும் தொழில் நாம் செய்யக்கூடாது என்று அர்த்தம் அல்ல. எந்தத் தொழிலை செய்தாலும் அந்த தொழில் பற்றிய அறிவை வெகுவாக வளர்த்துக் கொண்டு, என்ன வகையில் செய்தல் வெற்றி கிட்டும், மற்றவர்களில் இருந்து வேறுபட்டு எவ்வாறு வித்தியாசமாக செய்யலாம் என்று அந்தத் துறையில் வேண்டிய ஆராய்ச்சிகளை செய்து அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'உலக தமிழோசை' இல் கடந்த மூன்று பதிப்புகளில் முதல் தரமான தொழிற் கூடம் ஒன்றை எவ்வாறு கட்டி எழுப்பினார்கள் என்று ICOM ஸ்தாபன உரிமையாளரின் அனுபவங்களைக் கண்டோம். இடம்பெயர்ந்து இந்த மண்ணிற்கு வந்த தமிழ் மக்கள் 80 களின் கடைசிப்பகுதிகளிலும் தொடர்ந்து 90 களிலும் இப்போதும் தொழில்களை சொந்தமாக ஆரம்பித்து சிலர் வெற்றி பெற்றார்கள் பலர் தோல்வி கண்டு போட்ட முதலை இழந்திருக்கிறார்கள்.

பலசரக்கு வியாபாரம், பத்திரிகை, வானொலி, Video போன்ற துறைகளில் பல வியாபாரங்கள் தோன்றின. எப்படி முடிந்தது என்றும். என்ன என்ன செய்யலாம், செய்யக் கூடாது என்றும் அடுத்த இதழில் பார்ப்போம்.

*சிந்தனை தொடரும்....* *பரம் G. ஒரு சாதாரண மனிதன்*


**MARRIAGE BROKER**



நல்ல ஜாதகங்கள் கையிருப்பில் இருக்கிறது. செவ்வாய் தோசமுள்ள ஜாதகங்களும் உண்டு. மேலதிக

தொடர்புளுக்கு: :416 438-3281

**Aruna Food**

EAST WEST INDIAN AND CANADIAN GROCERIES

* துரித பணமாற்றுச் சேவை
* VIDEO CONVERT SYSTEM

நாங்கள் எந்த மலிவு விலையையும் சமன் செய்வோம்.

அருணா பூட்

3585 Keele Street, Unit 11
North York, Ont. M3J 3H5
Tel: 416- 638-9554
Fax: 416- 638-9584

**REAGAN RENOVATION**





*Basement திருத்த வேலைகள்,*
*Tiles பதிப்பதற்கு*
*Interlocking,*
*வீட்டிற்குரிய திருத்த வேலைகளிற்கு*

அழையுங்கள் (416) 286-5026


### 1 மில்லியன் சனத்தொகையை எட்டிப்பிடித்திருக்கும் இந்தியா

இந்தியாவின் சனத்தொகை May 11, 2000, 5: 05 நிமிடத்திற்கு 1 மில்லியன்களை (1,000,000, 000) அடைந்துள்ளது. உலகத்தில் ஆகக்கூடிய சனத்தொகையில் இரண்டாவது இடத்தைக் கொண்ட இந்தியா, இதே வீதத்தில் தனது சனத்தொகையை அதிகரித்துச் செல்லுமாயின் இன்னும் 50 வருடங்களில் முதலாவது இடத்தில் இருக்கும் சீனாவை வென்று விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1947ஆம் ஆண்டு பெரிய பிருத்தானியாவிலிருந்து சுதந்திரம் அடைந்த போது இந்தியன் சனத்தொகை 300 மில்லியனாக மட்டுமே இருந்தது. 53 வருடங்களில் சனத்தொகை 700 மில்லியன்களால் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் ஒரு நாளைக்கு 42,000 பிள்ளைகள் பிறப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

****************************

சனத்தொகையில் முன்னணியில் இருக்கும் முதல் மூன்று நாடுகள்

1. சீனா 2.இந்தியா 3.அமெரிக்கா

இலங்கையின் சனத்தொகை 20 மில்லியன்
(2000ஆம் ஆண்டின் கணக்குப்படி)


**பூச்சிகளை அழிக்கவே முடியாதா?**

**CITY PEST CONTROL**





* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* மூட்டைப்பூச்சிகள் * எறும்புகள்

போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

*100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்

*ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்*

* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.

* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.



**(416) 410-2786**

*7 நாட்களும் அழைக்கலாம்*

**கலைமகள் புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# விளையாட்டுத் தகவல்கள் (55)

-எஸ். கணேஷ்



## Asia Cups -2000

### கிரிக்கெட்

ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இவ் Asia Cup 2000 இவ்வருடம் பங்களாதேஷ் நாட்டில் டக்கா நகரில் நடைபெற்றது. பங்களாதேஷ், இந்தியா, ஸ்ரீலங்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கலந்துகொண்டது. இச்சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணியும் இலங்கை அணியும் மோதி பாகிஸ்தான் அணி 39 ஓட்டங்களில இலங்கை அணியை வெற்றி ஈட்டியது. சென்ற வருடம் இவ் Asia Cup ஐ ஸ்ரீலங்கா அணி கைப்பற்றியது யாவரும் அறிந்ததே. இந்திய அணியை படுதோல்வி அடையச் செய்த இலங்கை அணி இறுதியாட்டத்தில் வெற்றி பெறக் கூடிய சாத்தியங்கள இருந்தும் 39 ஓவர்களால் Asia Cup ஐ பாகிஸ்தான் அணியிடம் பறி கொடுத்துள்ளது. ஆனாலும் Asia Cup இல் நடைபெற்ற போட்டிகளை மேலோட்டமாக பார்க்கும் போது இலங்கை அணி மீண்டும் திறமையாக விளையாடத் தொடங்கியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. அரவிந்த டி சில்வா மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். அத்துடன் இளம் வீரர் ஆன கௌசல்யா வீரரட்ண என்ற புதிய வீரரும் இலங்கை அணியில சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். கடந்த சில மாதங்களாக இலங்கை அணியின பெறுபேறுகளை முன்னிட்டு இலங்கை அணி 3வது இடத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது முதலாம் இடம் அவுஸ்திரேலியா, இரண்டாம் இடம் பாகிஸ்தான், மூன்றாம் இடம ஸ்ரீலங்கா. அண்மையில் ICC இனால் வெளியிடப்பட்ட தரவுகளில் இருந்து இலங்கை அணியின் பெறுபேறுகள் தற்போது முன்னணியில் உள்ளன.

மேற்படி Asia Cup இல் நடைபெற்ற போட்டிகளின் விபரங்கள் பின்வருமாறு

1. May 29, 00 — **பங்களாதேஷ் Vs ஸ்ரீலங்கா**

| Bangladesh innings (50 overs maximum) | | | R | M | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| Shahriar Hossain | c de Silva | b Vaas | 2 | 17 | 11 | 0 | 0 |
| Javed Omar | not out | | 85 | 206 | 146 | 3 | 1 |
| Habibul Bashar | c Chandana | b Vaas | '1 | 11 | 9 | 0 | 0 |
| *Aminul Islam | c Chandana | b Weeraratne | 5 | 32 | 20 | 0 | 0 |
| Akram Khan | c Vaas | b de Silva | 41 | 87 | 72 | 4 | 0 |
| Naimur Rahman | run out (Chandana/Kaluwitharana) | | 0 | 2 | 0 | 0 | 0 |
| +Khaled Mashud | c Jayawardene | b Muralitharan | 18 | 46 | 38 | 0 | 0 |
| Mohammad Rafique | not out | | 11 | 9 | 7 | 1 | 0 |
| Extras | (b 2, lb 4, w 3, nb 3) | | 12 | | | | |
| Total | (6 wickets, 50 overs, 206 mins) | | 175 | | | | |

DNB: Manjural Islam, Hasibul Hussain, Khaled Mahmud.

FoW: 1-6 (Shahriar Hossain, 2.5 ov), 2-11 (Habibul Bashar, 4.5 ov), 3-27 (Aminul Islam, 11.5 ov), 4-102 (Akram Khan, 34.4 ov), 5-102 (Naimur Rahman, 34.5 ov), 6-159 (Khaled Mashud, 47.6 ov).

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Vaas | 10 | 0 | 28 | 2 (2nb, 1w) |
| Zoysa | 7 | 0 | 30 | 0 (1w) |
| Weeraratne | 7 | 1 | 18 | 1 (1nb, 1w) |
| Muralitharan | 10 | 0 | 35 | 1 |
| Chandana | 4 | 0 | 17 | 0 |
| Jayasuriya | 8 | 0 | 23 | 0 |
| de Silva | 4 | 1 | 18 | 1 |

| Sri Lanka innings (target: 176 runs from 50 overs) | | | R | M | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| *ST Jayasuriya | st Khaled Mashud | b Mohammad Rafique | 28 | 55 | 39 | 4 | 0 |
| PA de Silva | not out | | 96 | 122 | 93 | 13 | 3 |
| MS Atapattu | not out | | 41 | 66 | 57 | 3 | 1 |
| Extras | (lb 2, w 6, nb 5) | | 13 | | | | |
| Total | (1 wicket, 30.4 overs, 122 mins) | | 178 | | | | |

இலங்கை அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக Man of the Match விருது அரவிந்த டி சில்வாவிற்கு வழங்கப்பட்டது.

June 01, 00 — **ஸ்ரீலங்கா Vs இந்தியா**

| Sri Lanka innings (50 overs maximum) | | | R | M | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| *ST Jayasuriya | run out (Dravid/Chopra) | | 105 | 178 | 116 | 11 | 0 |
| PA de Silva | | c & b Kumaran | 23 | 56 | 38 | 3 | 0 |
| MS Atapattu | c Dravid | b Tendulkar | 42 | 72 | 56 | 3 | 0 |
| DPMdeS Jayawardene | lbw | b Agarkar | 7 | 21 | 14 | 0 | 0 |
| RP Arnold | c Dravid | b Tendulkar | 5 | 4 | 3 | 1 | 0 |
| +RS Kaluwitharana | c Ganguly | b Agarkar | 33 | 51 | 39 | 2 | 0 |
| TM Dilshan | c Ganguly | b Chopra | 1 | 6 | 5 | 0 | 0 |
| WPUJC Vaas | not out | | 34 | 37 | 26 | 1 | 2 |
| K Weeraratne | run out (Kumaran) | | 2 | 4 | 3 | 0 | 0 |
| M Muralitharan | not out | | 1 | 3 | 1 | 0 | 0 |
| Extras | (b 2, lb 11, w 9, nb 1) | | 23 | | | | |
| Total | (8 wickets, 50 overs, 222 mins) | | 276 | | | | |

DNB: DNT Zoysa.

FoW: 1-58 (de Silva, 12.4 ov), 2-162 (Atapattu, 30.5 ov), 3-183 (Jayawardene, 35.5 ov), 4-191 (Arnold, 36.3 ov), 5-202 (Jayasuriya, 39.4 ov), 6-209 (Dilshan, 41.4 ov), 7-264 (Kaluwitharana, 48.2 ov), 8-273 (Weeraratne, 49.3 ov).

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Agarkar | 10 | 1 | 55 | 2 (1nb, 2w) |
| Kumaran | 9 | 0 | 46 | 1 |
| Chopra | 10 | 0 | 49 | 1 (2w) |
| Kumble | 8 | 0 | 36 | 0 (2w) |
| Singh | 3 | 0 | 22 | 0 |
| Joshi | 2 | 0 | 11 | 0 |
| Tendulkar | 8 | 0 | 44 | 2 |

| India innings (target: 277 runs from 50 overs) | | | R | M | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| *SC Ganguly | c Kaluwitharana | b Zoysa | 13 | 35 | 26 | 2 | 0 |
| SR Tendulkar | c Jayawardene | b Weeraratne | 93 | 174 | 95 | 10 | 0 |
| SB Joshi | c Kaluwitharana | b Vaas | 11 | 18 | 15 | 1 | 0 |
| +R Dravid | | c & b Muralitharan | 24 | 64 | 44 | 3 | 0 |
| M Azharuddin | run out (Muralitharan/Kaluwitharana) | | 3 | 12 | 11 | 0 | 0 |
| A Jadeja | c Kaluwitharana | b Weeraratne | 8 | 22 | 14 | 0 | 1 |
| RR Singh | c Kaluwitharana | b Weeraratne | 6 | 22 | 18 | 0 | 0 |
| AB Agarkar | c de Silva | b Zoysa | 0 | 6 | 2 | 0 | 0 |
| A Kumble | not out | | 18 | 34 | 25 | 1 | 1 |
| N Chopra | run out (Muralitharan/Kaluwitharana) | | 5 | 22 | 13 | 0 | 0 |
| T Kumaran | c Vaas | b Jayasuriya | 7 | 8 | 10 | 1 | 0 |
| Extras | (lb 3, w 11, nb 3) | | 17 | | | | |
| Total | (all out, 45 overs, 212 mins) | | 205 | | | | |

FoW: 1-38 (Ganguly, 7.1 ov), 2-56 (Joshi, 10.3 ov), 4-139 (Azharuddin, 28.4 ov), 3-123 (Dravid, 25.3 ov), 6-174 (Tendulkar, 36.1 ov), 5-156 (Jadeja, 32.3 ov), 8-174 (Agarkar, 37.2 ov), 7-174 (Singh, 36.4 ov), 10-205 (Kumaran, 44.6 ov). 9-194 (Chopra, 42.2 ov).

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Vaas | 6 | 1 | 24 | 1 (3nb) |
| Zoysa | 10 | 0 | 47 | 2 (2w) |
| Weeraratne | 9 | 2 | 46 | 3 (1w) |
| Muralitharan | 9 | 1 | 38 | 1 (2w) |
| Jayasuriya | 9 | 0 | 39 | 1 (3w) |
| de Silva | 2 | 1 | 8 | 0 |

இலங்கை அணி 71 ஓட்டங்களால் இந்தியாவை வெற்றி கொண்டது. ஆட்ட நாயகனாக [Man of the Match] விருது ஜெயசூரியாவிற்கு வழங்கப்பட்டது.

3. June 05, 00 — **பாகிஸ்தான் Vs ஸ்ரீலங்கா**

முதலில் துடுப்பாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அத்தபத்து 62, சந்தான 46 ஓட்டங்களைப் பெற்றனர். அடுத்து ஆடிய பாகிஸ்தான் அணி 48.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களை பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றனர். ஆட்ட நாயகனாக Yousuf Youhana விருது பெற்றார்.

4. இறுதியாட்டம் — **ஸ்ரீலங்கா Vs பாகிஸ்தான்** (June 07, 00)

| Pakistan innings (50 overs maximum) | | | R | M | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| Saeed Anwar | c Muralitharan | b Jayasuriya | 82 | 164 | 115 | 4 | |
| Imran Nazir | | c & b Zoysa | 3 | 17 | 12 | 0 | |
| Shahid Afridi | c Arnold | b Zoysa | 22 | 35 | 27 | 2 | 0 |
| Yousuf Youhana | | c & b Chandana | 25 | 72 | 54 | 2 | 0 |
| Inzamam-ul-Haq | not out | | 72 | 88 | 66 | 5 | 1 |
| *+Moin Khan | not out | | 56 | 49 | 31 | 3 | 4 |
| Extras | (b 3, lb 7, w 2, nb 5) | | 17 | | | | |
| Total | (4 wickets, 50 overs, 213 mins) | | 277 | | | | |

DNB: Abdur Razzaq, Wasim Akram, Azhar Mahmood, Arshad Khan, Mohammad Akram.

FoW: 1-17 (Imran Nazir, 3.2 ov), 2-56 (Shahid Afridi, 11.1 ov), 3-124 (Yousuf Youhana, 28.4 ov), 4-173 (Saeed Anwar, 39.5 ov).

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Vaas | 8 | 0 | 52 | 0 (3nb, 1w) |
| Zoysa | 8 | 1 | 44 | 2 |
| Weeraratne | 6 | 0 | 23 | 0 |
| Muralitharan | 10 | 0 | 42 | 0 (2nb) |
| Chandana | 10 | 0 | 43 | 1 (1w) |
| Jayasuriya | 8 | 0 | 63 | 1 |

| Sri Lanka innings (target: 278 runs from 50 overs) | | | R | M | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| *ST Jayasuriya | | c & b Mohammad Akram | 22 | 41 | 25 | 3 | 0 |
| +RS Kaluwitharana | run out (Saeed Anwar/Moin Khan) | | 0 | 2 | 0 | 0 | 0 |
| WPUJC Vaas | | b Mohammad Akram | 10 | 15 | 14 | 1 | 0 |
| MS Atapattu | c Moin Khan | b Wasim Akram | 100 | 180 | 124 | 9 | 0 |
| PA de Silva | c Yousuf Youhana | b Arshad Khan | 20 | 77 | 43 | 0 | 0 |
| RP Arnold | c Shahid Afridi | b Arshad Khan | 41 | 60 | 44 | 4 | 2 |
| DPMdeS Jayawardene | run out (Shahid Afridi) | | 0 | 5 | 2 | 0 | 0 |
| UDU Chandana | | b Wasim Akram | 24 | 22 | 16 | 2 | 1 |
| DNT Zoysa | not out | | 6 | 13 | 4 | 1 | 0 |
| M Muralitharan | c sub (Shoaib Malik) b Abdur Razzaq | | 0 | 3 | | | |
| K Weeraratne | absent hurt | | - | | | | |
| Extras | (lb 8, w 5, nb 2) | | 15 | | | | |
| Total | (all out, 45.2 overs, 215 mins) | | 238 | | | | |

FoW: 1-6 (Kaluwitharana, 0.3 ov), 2-21 (Vaas, 3.4 ov), 3-46 (Jayasuriya, 7.4 ov), 4-117 (de Silva, 25.2 ov), 5-196 (Arnold, 39.4 ov), 6-202 (Jayawardene, 40.3 ov), 7-220 (Atapattu, 42.6 ov), 8-237 (Chandana, 44.5 ov), 9-238 (Muralitharan, 45.2 ov).

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Wasim Akram | 8 | 0 | 38 | 2 (1nb) |
| Mohammad Akram | 8 | 0 | 50 | 2 (2w) |
| Abdur Razzaq | 7.2 | 0 | 40 | 1 (1nb, 2w) |
| Azhar Mahmood | 10 | 0 | 40 | 0 (1w) |
| Arshad Khan | 10 | 0 | 42 | 2 |
| Shahid Afridi | 2 | 0 | 20 | 0 |

Asia Cup 2000 இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணி 39 ஓட்டங்களால் இலங்ன அணியை வென்றுள்ளது. இதில் ஆட்ட நாயகனாக Moin-khan க்கு விரு வழங்கப்பட்டது. Moin-khan இறுதியாக வந்து நான்கு சிக்ஸர்களும் 3 பவுண்ரிகளு விளாசித்தள்ளி 31 பந்துகளில் 56 ஓட்டங்களைப் பெற்றார். இதில் குறிப்பாக அத்தபத் 100 ஓட்டங்களை எடுத்தார்.


ஞானம்ஸ் ஸ்ரூடியோ
Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்
☎: (416) 750-8118
2381 EGLINTON AV. E.
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH



ELECTRICAL REPAIRS
உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள
றேடியோக்கள் வீடியோக்களை குறை
செலவிலும்,சிறந்த முறையிலும்
குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள
முருகதாஸ் - ☎ 261-6883

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம்

### 1978ஆம் ஆண்டில் வெளிவந்த் படங்களின் தொடர்ச்சி

சிவாஜி கணேசன் சுஜாதா நடித்து 100 நாட்களிற்கு மேல் தொடர்ந்து வெற்றி நடைபோட்ட 'அந்தமான் காதலி' முழுக்க, முழுக்க 'அந்தமான்' தீவில் திரைப்படமாக்கப்பட்டது. 'அந்தமான்' தீவிற்கு போகமுடியாத பலரிற்கு, 'அந்தமான்' தீவுப் பற்றிய நல்லதொரு அமைப்பை/வடிவை டைரக்டர் மிகச் சிறப்பாக காட்டியிருந்தார்.


சுஜாதா

சிவகுமார், ஜெய்கணேஸ் நடித்த 'அதைவிட ரகசியம்" கவிஞர் கண்ணதாசன் அவர்களால் ஆனந்தவிகடனில தொடர்கதையாக வந்த கதையை, திரைப் படமாக்கப்பட்டது. ஆனால், ஏனோ எதிர்பார்த்தளவிற்கு வெற்றி அளிக்கவில்லை.

ஹாசன், ரஜனிகாந் சேர்ந்து நடித்த படம் 'இளமை ஊஞ்சலாடுகிறது'. சுப்பர் ஸ்டாரும், காதல் இளவரசும சேர்ந்து ஐந்திற்கு மேற்பட்ட படங்களில் நடித்திருந்தார்கள், 'அபூர்வராகங்கள்', 'மூன்று முடிச்சு', 'பதினாறு வயதினிலே', 'நினைத்தாலே இனிக்கும்', 'அலாவுதீனும் அற்புதவிளக்கும்' இவற்றில் 'இளமை ஊஞ்சலாடுகிறது' ஸ்ரீதரினால் டைரக்ஷன் செய்யப்பட்டு வெள்ளிவிழாக் கொண்டாடியபடம். 'என்னடி மீனாட்சி சொன்னது என்னாச்சு" என்று அந்தக்கால இளைஞர்களால் முணுமுணுத்த பாடல் உள்ள படமும் இதுவே.


சத்தியராஜ்


பார்க்காதவர் பார்க்கக்கூடிய "ஒரு நடிகை நாடகம் பார்க்கிறார்" இது ஜெயகாந்தனின் கதை, படமாக்கப்பட்டத. ஸ்ரீகாந்த, லக்சுமி சிறப்பாக தங்கள் பாத்திரத்தை செய்திருந்தார்கள். ஆனால் இப்படம மக்களால் பெரிதளவில் ஏற்றுக கொள்ளப்படவில்லை. தோல்விப் படத்தில பட்டியலிலே அடங்கி விட்டது.

கமலஹாசனின் இரட்டை வேடத்தில் நடித்த படம் "சட்டம் ஒரு இருட்டறை" அன்றைய வில்லனாகவும் இன்றைய கதாநாயகனாகவும இடைக்கிடை இரண்டிற்கும் இடைப்பட்ட நடிகனாக இருக்கும் உங்கள் "சத்தியராஜ்" தோன்றிய முதல் படமும் இதுவே. இது ஒரு ஜனரஞ்சகமான வெற்றிப் படம்.

"சிகப்பு ரோஜாக்கள்" கமலஹாசனின் மற்றைய படம்" இவ்வாண்டில் வெளிவந்தது. பாரதிராஜாவால் டைரக்ஷன் செய்யப்பட்டது. பாரதிராஜாவின் குழுவிலிருந்த பாக்கியராஜ் படத்தில் முதன் முதலாக நடித்திருந்தார். இவருடன் வடிவுக்கரசியும் முதன்முதலாக த்திருந்தார். கிராமப் படங்களில் தன் காலைப் பதித்திருந்த இயக்குநர் இமயம் "பாரதிராஜா, தன்னால் நகர மக்களையும சந்திக்க முடியும் என்பதற்காக தயாரிக்கப்பட்ட படம் தான் சிகப்பு ரோஜாக்களே இதுவாகும். ஒரு வெற்றிப்படங்களும் "பைலட் பிரேம்நாத்" நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சிங்கள நடிகை மாலினி பொன்சேகாவுடன் இலங்கையிலும் தயாரிக்கப்பட்ட படம் இதுவாகும். இப்படத்தில் சிவாஜிகணேசன் "பைலட்" ஆக நடித்திருந்தார்.


ஜெய்சங்கர்

"வண்டிக்காரன் மகள்" கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கதை, வசனம் எழுதி அண்மையில் காலம் சென்ற மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் நடித்து வெற்றிப்படம். இது இந்தப்படத்தில் ஜெய்சங்கர் நடிப்பதற்கு பல எதிர்ப்புகள் வந்த போதும் ஜெய்சங்கர் நடித்த படம் இதுவாகும்.


பாக்கியராஜ்

ஜஸ்டிஸ் கோபிநாத், சிவாஜி, ரஜினி சேர்ந்து நடித்த முதல் படம். இந்தக் காலங்களில் வந்த பல படங்களில் ரஜினி காந்த இரண்டாவது கதாநாயகனாக அல்லது வில்லனாக நடித்து தன்னுடைய திறமையால் முன்னிற்கு வந்தவர்தான்.

"டாக்சி டைரவர்" இப்படம் மக்கள் கலைஞர் ஜெய்சங்கரின் 100வது படம். மேலும் இந்தப் படத்தில் உள்ள மற்றைய சிறப்பு என்னவெனில், M.G.R.I சுட்டதனால் ஜெயிலிற்கு சென்றிருந்த நடிகவேள் M.R. ராதா அவர்கள், ஜெயிலில் இருந்து வெளியே வந்து நடித்த முதல் படமும் இதுவே. டைரக்ஷன் மகேந்திரனும், சிறந்த ஒளிப்பதிவாளர் பாலுமகேந்திராவின் கைவண்ணத்தில் ரஜினிகாந், சரத்பாவு, சோபா நடித்து வெள்ளிவிழாக் கொண்டாடிய சிறந்த படம் 'முள்ளும் மலரும்". அண்ணன் தங்கையின் உறவு முறைகளைக் கொண்டு பல படங்கள வெளிவந்த போதும் இந்தக் காலகட்டத்தில் வந்து மக்கள மத்தியில் பெரும் மதிப்பைப் பெற்ற படம் ஆகும்.

'செந்தாளம் பூவில் வந்தாடும் தென்றல்" என்று தொடங்கி வரும் இனிமையான, நெஞ்சில் நெகிழ்வைக கொண்டுவரும் பாடல் உள்ள படமும் இதுவே. இந்தப் படத்திற்கு பிற்பாடு முரட்டு நடிகரான ரஜினிக்கு மக்கள் மத்தியில் தனியான மதிப்பு உருவாக்கிக் கொடுத்துள்ளது.


பாலு மகேந்திரா

ரஜினி, ஸ்ரீதேவி நடித்து சிங்கப்பூரின் முழுக்கத் தயாரித்த படம் 'பிரியா'. இப்படம் முதன் முதலாக "ஸ்ரியோ" முறையில் பாடல்கள் ஒலிப்பதிப்பு செய்த படம். நல்ல பலபாடல்களைக் கொண்ட படமாகும். புகழ் புகழ் பெற்ற ஹிந்திப் படமான 'மதர் இந்தியா' வின் கதை தழுவிய தமிழ படமே 'புண்ணிய பூமி' ஆகும். இதில் சிவாஜி - முத்துராமன் நடித்திருத்தார்கள். கலைப்புலி தானு தயாரித்து ரஜினி நடித்த படம் பைரவி. இப்படத்தின் டைட்டில் முதன முதலாக ரஜினிக்கு 'சுப்பர் ஸ்டார்" என்ற பட்டத்தைக் கொடுக்கப்பட்டிருந்தது. நல்ல பல படங்கள், பல நடிகர்கள், பல சிறப்புகள், பல கதைக-ளைக் கொண்ட படங்களையும் தந்த சிறந்த ஆண்டாக 1978ஐ கொள்ளலாம்.


**KD FINANCIAL SERVICES**

Vamadevan Jeyamohan (Jey)
(President)
Royal Bank Approved Third Party Referral Agent

**VISA CARDS UPTO $5000**

புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில்
கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும்
வேலை செய்யும் கடிதம் (Employment Letter)
உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்

Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net

தொடர்புகளுக்கு: weekdays - 5:30pm - 10:00 pm.

Nada Jeyadevan Financial Rep.
Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm








**EZ DRIVING SCHOOL**


நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த
மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச
அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம்
பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்



JEYAKUMAR ✆ (416) 283-4100
Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant



## பகுதி 11

### நானும் ஒரு கணணி வாங்கப்போகிறேன்

[Tips for Computer]

Computer ஐப் பொறுத்தவரை பலர் மற்றைய பொருட்கள் வாங்குவது போல என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் கொம்பியூட்டர் வாங்குவது என்பது வேறு TV, VCR, மளிகைப்பொருட்கள், துணிமணி வாங்குவது என்பது வேறு. ஆகவே நாம் அதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கணணி என்பது மற்றைப் பொருட்கள் மாதிரி இல்லை அது இயங்கிக் கொண்டி இருக்கும். நீங்கள் சும்மா இருப்பதில்லை. நீங்கள் கணணியோடு பேசுவீர்கள் அது உங்களுடன் பேசுவது மாதிரி தொடர்பு இருந்து கொண்டே இருக்கும். ஆகவே உங்களுடைய அறிவுக்கு தகுந்த மாதிரி வாங்க வேண்டும். அதாவது ஒரு நண்பனையோ, நண்பியையோ தேர்ந்தெடுப்பது போலத்தான் ஒரு கணணியையும் நீங்கள் தேர்ந்து எடுக்க வேண்டும். அது உங்களுடன் சேரக்கூடிய நண்பன் அல்லது நண்பி, அது உங்களுடன் சேர்ந்து இருக்கும் போது உங்களின் அறிவுக்குத் தகுந்த மாதிரி வேலை செய்யுமா, அதை உங்களால் Handle பண்ணமுடியுமா அல்லது உங்களையும் மிஞ்சி சக்தி வாய்ந்ததாக இருக்குமா? அல்லது அது சக்திக்குக் குறைவாக இருக்கப் போகிறதா என்பனவற்றையெல்லாம் அவதானித்துத்தான் நீங்கள் ஒரு கணணியை வாங்கவேண்டும்.

விலையின் அடிப்படையில் கணணியைப் பார்க்கும் போது அதன் விலை ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே போகின்றது. பணத்தை சேமிப்பதற்காக விலை இன்னும் கொஞ்சம் குறைந்தவுடன் வாங்குவோம் என்பது கடல் அலை ஓயட்டும் அதன்பின் குளிக்கலாம் என்பது போல் கடல் அலை ஓயப்பாவதில்லை நீங்களும் குளிக்கப்போவதில்லை. ஆகவே உங்களுக்கு எப்ப தேவையோ அப்போது நீங்கள் அதை வாங்க வேண்டும். அத்துடன் அன்றையவிலை தான் சரியான விலை என்று நினைத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பின்பு குறையும் விலையைப் பற்றி நீங்கள் கவலைப்படக் கூடாது. உதாரணமாக 5 வருடம் கழித்து கொம்பியூட்டர் வாங்க வேண்டும் என்று நினைத்து வாங்காமல் இருந்தால் நீங்கள் கொஞ்சப் பணத்தை சேமித்திருந்திருக்கலாம். அனால் அந்த 5 வருடத்தில் கொம்பியூட்டர் பற்றிய பல அறிவைத் தெரிந்து கொள்ளாமல் போய்விடுவீர்கள். இந்த அறிவு நீங்கள் சேமித்த பணத்தைவிட உயர்ந்தது என்பதை நீங்கள் பின்பு உணருவீர்கள்.

தற்பொழுது நீங்கள் கொம்பியூட்டர் வாங்க வேண்டும் என்று முடிவு எடுத்து வீட்டீர்கள். உங்கள் நண்பர்கள் சொல்கிறார்கள் வானொலியில் சொல்கிறார்கள், பத்திரிகையில் போடுகிறார்கள் எல்லோரும் கொம்பியூட்டர் பயன்படுத்துவது நல்லது என்று சொல்லுகிறார்கள் என்று ஒரு முடிவுக்கு வந்து விடுகின்றீர்கள். இனி இந்த கொம்பியூட்டர் வாங்குவதற்கு தெரிந்து இருக்கவேண்டிய சில விடயங்களை ப் பற்றிப் பார்ப்போம். உதாரணமாக வானொலியிலோ, பத்திரிகையிலோ வருகின்ற விளம்பரங்களை நீங்கள் பார்க்கும் போது அதில் வருகின்ற சொற்கள் அல்லது சொற்பதங்கள் என்னவென்று உங்களுக்கு தெரியாமல் இருக்கும். ஆகவே அந்த சொற்களையும் சொற்பதங்களையும் நீங்கள் தெரிந்து கொண்டாலே உங்களுக்கு 40 வீதம் கொம்பியூட்டரைப் பற்றி உங்களுக்கு தெரியும் என்று அர்த்தம்.

## Price, Quality, Satisfaction ...



விளம்பரத்தில் பார்த்தால் ஒரு கணணி 500 MHZ என்று போட்டிருப்பார்கள். அது என்ன 500 MHZ என்றால் முழுக் கொம்பியூட்டர் 500 MHZ இல்லை. அதனுடைய இயங்கக்கூடிய CPU (Central Processing Unit) அதனுடைய Speed தான் 500 MHZ. இந்த 500 MHZ ஐத் தான் கொம்பியூட்டருக்கும் சொல்லுகிறோம். உதாரணமாக இது ராமுவின் வீடு என்று சொல்லுகிறோம். அந்த வீட்டில் பலர் இருப்பார்கள். ஆனால் ராமுதான் அந்த வீட்டின் தலைவர் ஆகையால் ராமுவின் பெயரைச் சொல்லி அழைக்கின்றோம். அதேமாதிரித்தான் இந்த CPU தான் கணணியில் Head. ஆகையால் தான் அதனுடைய Speed ஐ சொல்லி என்ன Computer என்று சொல்லுகிறோம். 500 MHZ என்று சொன்னால் அந்த கொம்பியூட்டரில் இருக்கக்கூடிய தலைமையகம் வகிக்கக்கூடிய அந்த CPU Speed தான். இதுமட்டும் தெரிந்தால் போதாது. இதனுடைய மற்றைய உறுப்பினர்கள் யார்? என்ன அவர்களுடைய சக்தி? என்பன பற்றி தெரிந்திருப்பது அவசியம். ஒரு Computer இனுடைய முழு வேகம்( Speed) மற்றைய உபயோகங்கள் எல்லாம் CPU இல் மட்டும் தங்கியிருக்கவில்லை. அதனுடைய Hard Drive (HDD), Hard Drive Speed, Memory (RAM), RAM இனுடைய Speed, Memory இனுடைய அளவு என்று சொல்லிக் கொண்டே போகலாம். இவை எல்லாம் சேர்ந்த ஒரு Combination தான் Computer இனுடைய முழு Speed. உதாரணமாக சிலர் Computer Upgrade செய்யும் போது கேட்பார்கள் 66 MHZ ஆக இருக்கிறது. அதை 100 MHZ ஆக மாற்றினால் 40 சதவீதம் அதிக Speed ஆக இருக்குமா? என்று கேட்பார்கள். அது தவது. CPU ஐயை மட்டும் கூட்டினாலும், HDD, RAM, Motherboard என்பன அதே Speed இல் தான் இருக்கின்றன. ஆகையால் எல்லாம் சேர்ந்து வரும் போது தான் முழு Speed ஐயும் பெறக் கூடியதாக இருக்கும். உதாரணமாக இரண்டு மாடுகள் பூட்டிய வண்டியில் ஒரு மாடு மட்டும் வேகமாக ஓடக்கூடிய மாடாகவும் மற்றையது வேகமாக ஓட முடியாத மாடாகவும் இருந்தால் அந்த வண்டி Speed ஆக ஓடும் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது. அதில் இரண்டு மாடுமே வேகமாக ஓடக்கூடியதாக இருந்தால் தான் அந்த வண்டி மிகவேகமாக ஓடும். இதே போலத்தான் எல்லாவற்றையும் அவதானித்து வாங்கினால் தான் கொம்பியூட்டரின் வேகத்தையும், அதன் முழுப் பலனையும் நீங்கள் பெறலாம்.

இனிமுக்கியமாக பார்க்கவேண்டியது RAM என்று சொல்லக்கூடிய Memory power. அதாவது Screen இல் செய்து கொண்டிருக்கும் போது ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய Memory என்ற RAM (Random Access Momory ) இது என்ன Speed என்ன Size என்பதைப் பார்க்க வேண்டும். இது சாதாரணமா 16M, 32M, 64M, 128M என்ற அளவில் தான் இருக்கும். சாதாரணமாக தற்பொழுது வீட்டுக் கொம்பியூட்டருக்கு 64M போதுமானது. அதனுடைய Speed ஐ பலவகையாகப் பார்க்கலாம். இது 66, 100, 133 என்று MHZ என்று இருகிறது. இதில் 100 MHZ என்பது சாதாரணமானது. 133 MHZ என்பது சற்று அதிகமானது. ஆகவே 100, 133 MHZ ஐ தெரிந்தெடுத்துக்கொள்வது சிறந்தது.

அடுத்ததாக நீங்கள் கவனிக்க வேண்டியது Hard Drive. இதையும் இன்னும் பல பாகங்களையும் அடுத்த இதழில் பார்ப்போம்.

உங்களுடைய கேள்விகளையும், கருத்துக்களையும், நீங்கள் e-mail (மின் அஞ்சல்), தொலைநகல் (Fax) தொலைபேசி (Telephone) மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம்.
e-mail : vlambaram@email.com

THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
( CET )
சீலன். A (சிவா)
TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836
email: seelany2k@email.com
உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு $400 இலவசம்

அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)
THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD
TWO YEARS DIPLOMA ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.
இன்னும் பல சலுகைகள் உண்டு
உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.
இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்
நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால
அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக் குழந்தைகளே!

Banana Leaf
BANANA LEAF
Take-out & Catering
Everyday Special
ஆடு, மாடு, புரியாணி
Free வட்டிலப்பம்
$5.50
தினமும் ஸ்பெஷல்

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | LampRice | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030,
(416) 704-8208 (24hrs.)

# விண்வெளி

தருபவர்- கனி

இதுவரையில் சூரியக்குடும்பத்தில் பாறை உலகங்களாகிய உட்சூரியத் தொகுதியின் கோள்களைப் பற்றிப் பார்த்தோம். இறுக்கமான அடர்த்தி கூடிய இந்தக் கிரகங்களுக்கு வெளியே காணப்படும் இராட்சத வாயு உலகங்களாகிய வெளிச் சூரியத்தொகுதிக் கோள்கள் பற்றி இனிக் கவனிப்போம். வியாழன், சனி, யூரேனஸ், நெப்ரியூன், புளூட்டோ என்ற ஒழுங்கில் சூரியனில் இருந்து காணப்படும் இந்தக் கோள்களில் புளூட்டோ வித்தியாசமானது. வெறும் பனி உலகமாகவே இந்த புளூட்டோ காணப்படுகிறது. இருட்டுள், குளிரில் காணப்படும் இந்தப் புளூட்டோவை விட ஏனையவை சில அம்சங்களில் பொதுவாகக் காணப்படுகின்றன. இக்கோள்கள் யாவும் வாயுக்களினால் ஆனவை. கோள்களைச் சுற்றிப் பிரகாசமான வளையங்கள் காணப்பகின்றன. அத்துடன் பல சந்திரன்கள் ஒவ்வொரு கோளையும் சுற்றி வருகின்றன. சுமார் 7,8 பில்லியன் வருடங்களின் முன் நமது பூமி உட்பட மற்றை நாலு பாறை உலகங்கள் கூட வாயுத் திரட்சியாகத்தான் இருந்து பின் ஒன்றிணைந்து இறுகி பாறை உலகங்கள் ஆயின என்பது ஆய்வாளர்களின் கூற்று. ஆனால் இந்த வாயு உலகங்கள் இனி ஒடுங்கி, இறுகிப் பாறை உலகங்கள் ஆவதற்கு இனி சாத்தியமில்லை என்கிறார்கள். ஏனெனில் சுமார் 4½ பில்லியன் வருடங்களின் முன் நமது சூரியன் முழுமை பெற்று தனது சக்தியை வீசத் தொடங்கியபின் சூரியனின் சக்தி காரணமாக சூரியத் தொகுதி துப்பரவு செய்யப்பட்டு சூரியத்தொகுதியின் ஆக்க வேலைப்பாடுகள் எல்லாம் முற்றுப்பெற்றுவிட்டன.

இந்த வாயு உலகங்கள் சூரியத் தொகுதி எவ்வாறு தோன்றியிருக்கும் என்ற புதிரின் ஒரு பகுதியை தெளிவுபடுத்துகின்றன. நமது சூரியத்தொகுதி கூட ஒரு காலகட்டத்தில் இந்த வாயு உலகங்களின் வடிவிலேயே இருந்தது. சூரிய நெபுலாவின் மையத்தில் இருந்த பெரும் வாயுத்திரட்சி சூரியனாக மாற சுற்றிக் காணப்பட்ட வளையங்கள் சிறுசிறு வாயுத்திரட்சிகளாகிப் பின்னர் கோள்கள் ஆயின. சூரியத் தொகுதியின் தோற்றம் பற்றிய பகுதியில் இதனை ஓரளவு தெளிவாகப் பார்த்தோம். இனி சூரியனின் முதலாவது வாயு உலகமாகிய வியாழன் பற்றிப் பார்ப்போம்.

சூரியக் குடும்பத்தில் சூரியனுக்கு அடுத்துப் பெரிய உறுப்பினர் இந்த வியாழன் ஆகும். நமது பூமியைப் போல் சுமார் 317 மடங்கு பாரமான இந்த வியாழனை "சூரியனின் பெரிய பையன்" எனச் செல்லமாகக் கூறுவோரும் உண்டு. பெரிய உருவம் அதிக திணிவு என்பவை காரணமாக வியாழனின் நிலைகளைப் பொறுத்து சிலசில காலங்களில் பூமியில் அழிவுகள் ஏற்படலாம் என எதிர்பார்ப்புகள் ஏற்ட்டதும் உண்டு. சில சமயங்களில் இந்த வியாழன் சூரியனின் உட்தொகுதிக் கோள்களுக்கு பாதுகாவலன் போல் தொழிற்படுவதுமுண்டு. சூரியனின் தொலைவில் இருந்து வரும் சில வால் வெள்ளிகள் பெரிய பாறைகள் என்பவற்றை இந்த வியாழன் தனது ஈர்ப்பு விசையால் கவர்ந்து தனது ஆட்சிக்குள் கொண்டு வந்துவிடும்! அல்லது தன்னுடன் மோதச் செய்து அழித்துவிடும். சிலகாலங்களுக்குமுன் Shoe maker என்ற வால்வெள்ளி உடைந்து சிதறி துண்டு துண்டுகளாகி வியாழனுடன் மோதி அழிந்து போனதை நாம் எல்லோரும் அறிவோம். எமது காலத்தில் ஏற்பட்ட இந்த மிகப்பெரிய விண்வெளி நிகழ்வினை Hubble விண்வெளி தொலைக்காட்டியின் உதவியுடன் எல்லா தொலைக்காட்சிச் சேவைகளும் காட்டின. வியாழன் ஒரு வாயு உலகமாகையினால் இந்த வால்வெள்ளியின் மோதுகை வியாழனில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தவில்லை. ஒரு வேளை இந்த வால்வெள்ளி ஒரு பாறை உலகத்தை மோதியிருப்பின் அப்பாறை உலகில் பெரிய பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கும் ஒரு காலத்தில் பூமியுடன் ஒரு வால்வெள்ளி மோதியதின் விளைவாகவே அக்காலத்தில் பூமியில் வியாபித்திருந்த டைனோசர் என்ற இனம் முற்றாகவே அழிந்தது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

வியாழனைச் சூரியனின் பெரிய பையன் எனச் சிலர் கூறும் போதிலும் வேறு சிலர் வியாழன் சூரியனுக்கு உண்மையிலேயே சொந்தமானது அல்ல எனச் சொல்கின்றார்கள். வியாழன் ஒப்பீட்டு ரீதியில் மற்றைய கோள்களை விடப் பிரமாண்டமானதாக இருப்பதனால் தாம் சந்தேகிப்பதாக கூறுகின்றார்கள். வெளியில் எங்கேயோ ஒரு இடத்தில் இருந்த சிறிய தூசுக்கூட்டம் திரண்டு நட்சத்திரமாக முயற்சிக்கையில் போதிய திணிவு இல்லாது இடையில் நின்றுவிட்டது. அது சூரியனுக்கு அண்மையில் வர சூரியன் ஈர்த்து தனது செல்வாக்குக்குள் வியாழனைக் கொண்டுவந்து விட்டது. அதன் காரணமாக சூரியனின் ஐந்தாவது பாறை உலகம் ஒன்று வியாழனுக்கு அருகில் வர அது உடைந்து அவ்விடத்தில் குட்டிக் கிரகங்களை பல லட்சக்கணக்கில் தோற்றுவித்துவிட்டது எனக் கூறுகின்றார்கள்.

என்ன! வியாழனுக்குப் பின்னால் இவ்வளவு கதையிருக்கா? வியாழனுக்கு இவ்வளவு பலம் சக்தி இருக்கிறதா? வியப்பாக இருக்கிறதா! இன்னமும் வரும் ...ட்களில் மேலும் பார்ப்போம்.

**ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரை பொன்போற் பொதிந்து.** திருக்குறள்

தமக்கு இழைக்கப்படும் தீமையைப் பொறுத்தக் கொள்பவர்களை உலகத்தார் பொன்னாக மதித்துப் போற்றுவார்கள். பொறுத்துக் கொள்ளாமல் தண்டிப்பவர்களை அதற்கு ஒப்பாகக் கருத மாட்டார்,


***வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக***
***கேள்போல் பகைவர் தொடர்பு*** திருக்குறள்

வெளிப்படையாக எதிரே வரும் பகைவர்களை விட உறவாடிக் கெடுக்க நினைப்பவர்களிடம் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

***கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா***
***செய்யாமை மாசற்றார் கோள்.*** திருக்குறள்

சினங்கொண்டு சொல்லாலோ செயலாலோ ஒருவன் துன்பம் தரும்போது அந்தத் துன்பத்தை அவனுக்குத் திரும்பச் செய்யாமல் தாங்கிக் கொள்வதே சிறந்த மனிதரின் கொள்கையாகும்.

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
S.ஸ்ரீதரன் -(416) 410-6401

பிராமணாள் சைவ உணவு
செவ்வாய், வெள்ளி தினங்களிலும் ஏனைய விசேட விரத நாட்களிலும் மதிய, இரவு வேளை உணவுகள் முன்கூட்டிய அறிவிப்பில் தயாரித்துக் கொடுக்கப்படும் நீங்கள் அழைக்க வேண்டியது
அஷ்யா (416) 724-8336

ரதீக்கா நகை மாளிகை
- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, எங்கள் விருப்பமோ இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, எங்கள் விருப்பமோ ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
- உங்கள் விருப்பமோ இந்த நகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, எங்கள் விருப்பமோ ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமையுடன் சொல்வது
- தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை அலுவலைப்பார்ப்பம் என்று அலைய வேண்டாம். ரதீக்கா நகைமாளிகையும் மஞ்சுளா பஷனும் ஒரே இடத்தில்.
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

ரதீக்காவின் புதிய விலாசம்
RATHICKA JEWELLERY
5635 Finch Ave. East, Unit 3, (Finch and Tapscott)
Scarborough, Ontario, M1B 5K9, Canada
Tel: (416) 299-1343



# செறன்டிப் (F)பிறஸ் மார்க்கட்

# SERENDIB FRESH MARKET

ஒவ்வொரு வாரமும் **மலிவு** விற்பனை

விபரங்களுக்கு

"உலகத்தமிழர்" பத்திரிகையைப் பார்க்கவும்.

**Tel: (416) 269-9913**
2631 Eglinton Ave. East,
Scarborough, Ont. M1K 2S2

உங்கள் சேமிப்பை மேலும்
அதிகரிக்க இதுவும் ஒரு வழி!





# ROYAL JASMINE FURNITURE




* சகலவிதமான தளபாடங்களிற்கும் ஒரே இடம்.
* உங்கள் எண்ணம் போல தளபாடங்கள் செய்து தரப்படும்.

உற்பத்திச்சாலையிலிருந்து நேரடி விநியோகம்.








**2408 EGLINTON AVE. EAST,TORONTO.**
(Kennedy Subway இற்கு அருகாமையில்)
தொடர்புகளிற்கு: (416)-285-8829

**SRI DURKA HOME FURNITURE**
7290 Hutchison Suite #202
Montreal (Park Metro இற்கு முன்பாக)
☎ (514) 495-4155
☎ (514) 276-7378

# infoTamils Online

**தொழில்நுட்ப வளர்ச்சியின் காலத்திற்கேற்ப உங்கள் வர்த்தக நிறுவனங்கள் பற்றிய விபரங்களை internet ல் இலவசமாக விளம்பரம் செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.**

## www.infotamils.com

If you are a business-owner wishing to attract that special Tamil market, take the opportunity NOW to advertise with infoTamils Online. Need help moving your company into the exciting and profitable world of Internet marketing?


For movies show times visit infoTamils Online


Contact infoTamils Online Today!
http://www.infotamils.com
Toll free: 1 888-257-2891
e-mail : info@infotamils.com

# SABONA & GIFT

உங்கள் நடமாடும் தொலைபேசிகளுக்கான சேவையை மிக மிகக் குறைந்த விலையில்
**CELL U TECH** இனூடாக செய்து தருகிறோம்.
***ROGERS AT&T, BELL MOBILITY, FIDO, CLEAR NET*** ஆகிய தொலைபேசிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
***ERVAMATIN, SABONA*** காப்புக்கள் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

முடி உதிர்வை தடுத்து மீண்டும் வளரச் செய்ய....
**ERVAMATIN**




2602 B Eglinton Ave. E
Scarborough இற்கு
மாற்றப்பட்டுள்ளது.

எமது தொலைபேசி இலக்கங்கள்
மாறவில்லை

**(416) 264-8787**
**(416) 269-8151**

e.mail: sabona@home.com

# "ராசம்மாவின் ராஜ்யம்"

நகைச்சுவைத் தொடர்... (22)

-கலகலப்பு தீசன்-

சிரித்து சிந்திக்க



ஏன் வீணா... சண்டைபிடிக்கிறியள் சண்டையை விட்டா...
வேறை தொழில் இல்லை...

இப்படி... ரூபன், உலகரையும் ராசம்மாவையும் சத்தம் போட்டு
திட்டியதுண்டு. விரும்பித் தானே.... Marry பண்ணினீர்கள்....
பேந்தென்தென்ன?.......
இந்தக் கேள்வியில்.... உலகரும் ராசம்மாவும்
112 கோடி பெறுமதியுள்ள டோரா படகு
அழிவுக்கு விளக்கம் கொடுக்கத்
தெரியாத அமைச்சர் போல
வாயடைத்துப் போனார்கள்.



காதல் என்பது... எதுவரை.... கல்யாண காலம் வரும் வரை...
கல்யாணம் என்பது எதுவரை....
கழுத்தினில் தாலி... விழும் வரை...
கழுத்தினில் தாலி ... விழுந்தபின்???

அது... அவரவர் விதியைப் பொறுத்தது **விதி.......**
**இது மட்டும் இல்லாவிட்டால்.... உலகம் இயங்காது...**



ஏஜென்டுக்கு பணம் கட்டி 10 நாளில் கனடா வந்தால் அது
ஏஜென்ட் முகராசிக்காறன் வந்தவன், அதிஸ்டக் காரன்
அல்லது.......... ம்.... எல்லாம் விதி

ரூபனும் ரூபியும் பல்கணியில் நின்று குஷி படத்தில்
ஜோதிகாவும் விஜய்யும் சண்டை பிடித்தது போல,

கோவை சரளாவும், வடிவேலும் 'விரலுக்கேற்ற வீக்கம்'
படத்தில் சண்டைபிடித்தது போல இருந்தது.
**பணம் கொடுத்து வீடியோப் படங்கள் பார்ப்பவர்களின்
அறிவுக்கு இது ஒரு வேலை...**



காதல் என்று கலரில் இளசுகள் கனவு காணும் போது
சீதனம் என்ற செல் விழுவது போல
[செல் அல்லது சொல், இரண்டும் ஒண்டுதான் ]
**செல் உடம்பைக் காயப்படுத்தும்
சொல் மனதைக் காயப்படுத்தும்**



அப்பாவின் சொத்து யாருக்கு?
அம்மாவின் நகையாருக்கு?
பாங்கிஸ் உள்ள பணம் யாருக்கு? என்று.
உள்ளவர்கள் வீட்டில் சண்டையும்

அப்பா அம்மா இப்படி கடன்பட்டு எம்மை கலங்க
வைத்து விட்டார்களே என சொத்து
இல்லாதவர்களின் பிள்ளைகளின் அங்கலாய்ப்பு!!

பறவைகள்.... பலவிதம்... என்பது போல
**பிரச்சினை பலவிதம்...**



ரூபன்.... ரூபியின் பிரச்சினை பெரிய பிரச்சினையா....
ரூபனுக்கு கோபம் வந்து விட்டது என உலகருக்கும்...
ராசம்மாவுக்கும் தெரியும். எப்படி?.....

ரூபன் ரூபியுடன்... இங்கிலீஸ் பேசுகிறான் கோபத்தில்,
அல்லது வெறியில் தான் அதிகமானவர்கள் 2வது
மொழி பேசுவார்கள். ஆங்கிலம், டச், டொச்,
சிங்களம், பிரெஞ்சு .. ஏதோ... ஏதோ....

ரூபனின் குரல் தேனிசைத் தென்றல் தேவாவின் குரல்
'உப்புக் கருவாடு' பாடலில் வந்தது போலிருந்தது


யூ.. நோ... ஐ.. வில் ரெல்யூ.. கேக்கிறதென்டால் கேள் அல்லது கெட் அவுட்
தமிழும் ஆங்கிலமும் இரண்டறக் கலந்தது.

ஐ. வேக், வண்வேக், ரூ வேக் திறீ வேக் (Work)



24 அவேர்ஸ் வேக்!! ராசாத்தியக்கா மெதுவாக
உலகரின் காதுக்குள் கேட்டா.
ஏன் றேடியோ ஸ்ரேசனிலியே வேலை செய்யிறான்...

உலகர் திரும்பிய வேகத்தில் ராசாத்தியக்கா
மெதுவாக எழுந்து
ராசம்மாவின் பக்கத்தில் போய் இருந்தா..



ராசம்மாக்கா சகல வாரப் பத்திரிகைகளிலும் வாரபலன்
பார்த்தா.. ஒன்றில் உலகரின் பலன் நல்லதாகவும்
தனது பலன் தலைகீழாகவும் இருப்பதை. ....


## நற்செய்தி

மக்களின் நலன்கருதி அனுபவமிக்க பல் வைத்தியர் ஒருவர் அடுத்த "உலக தமிழோசை" இதழில் இருந்து பல் சம்பந்தமான கட்டுரைகளை எழுதவிருக்கிறார். பல் சம்பந்தமான சந்தேகங்கள், கேள்விகளிற்கு இவர் பதில் வழங்குவார். கேள்விகளை "உலக தமிழோசை" தொலைநகல் இலக்கம் 416 282-4978 இற்கு அனுப்பி வையுங்கள்.


YARL **WINDOW COVERING**
**1530 WARDEN AVENUE**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

**CUSTOM MADE..**
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்


தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE



# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்



## பகுதி (30)

இரண்டாவது வீதிப் பரீட்சை (G2) பத்திரத்தின் அடுத்த அத்தியாயத்தில் பிரதான ஒழுங்கையிலும் குடியிருப்பு ஒழுங்கையிலும் எவ்வாறு வாகனம் செலுத்துதல் மதிப்பிடப்படுகின்றது என்று ஆராய்வோம்.

| Business/Residential | Bus 1 | Bus 2 | Res 1 | Res 2 |
|---|---|---|---|---|
| Traffic check: Not look at hazard | ☐ | ☐ | ☐ | ☐ |
| Not look at hazard | ☐ | ☐ | ☐ | ☐ |
| Not look at hazard | ☐ | ☐ | ☐ | ☐ |
| Mirror check: Not in 10 sec ............ | ☐ | ☐ | ☐ | ☐ |
| Lane: Wrong/wanders/obstacles .... | ☐ | ☐ | ☐ | ☐ |
| Speed: Over limit/traffic .................. | ☐ | ☐ | ☐ | ☐ |
| Speed: Uneven/avoid obstacles .... | ☐ | ☐ | ☐ | ☐ |
| Spacing: 2-3 sec/rear wheels/sides/ blind spots/inc. follow distance ........ | ☐ | ☐ | ☐ | ☐ |
| **Completed** .................. | ☐ | ☐ | ☐ | ☐ |

Business/Residential (பிரதான வீதியும் குடியிருப்புகள் உள்ள ஒழுங்கையும்

**a. Traffic Check:**

Not look at hazard
Not look at hazard
Not look at hazard

In a business section, there are many places other than intersection where vehicles or pedestrians are likely to be entering the road from the side entrances. These places include business entrances, institutions, construction sites, pedestrian crossings railway crossings, and so on. At these locations the driver looks left and right to check for vehicles or pedestrians about to enter the road.

On a residential street the driver watches activity at entrances to schools pedestrian crossings, driveways side walk's and any other locations where there might be traffic hazards. On a rural road, the driver watches for activity at entrances to residences forms, business, and industrial sites. at these locations the driver looks left and right to check for vehicles or pedestrians about to enter the road.

[சுருக்கமாக சொல்லப் போனால ஒரு தச அவதானியாக பத்து திக்கும் அவதானிக்கும் திறமையினை வளர்த்து ஆபத்திக்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்]

**b. Mirror Check: Not in 10 sec.**

வாகனம் பிரதான வீதியிலோ அல்லது குடியிருப்பி ஒழுங்கையினூடடோ செலுத்திக் கொண்டு இருக்கும் போது 5 - 80 செக்கனுக்கு ஒரு முறை பின் கண்ணாடியினூடாக பக்க கண்ணாடிகளினூடாகவும் நிலைமைகளை அவதானிக்க வேண்டும். வாகனங்கள் நெருக்கமான நிலைமையில் மேலும் அடிக்கடி அவதானிக்க வேண்டும்.

**C. Lane: Wrong / Wanders/Obstacles**

In business area (main roads) the driver selects the lane that provides the safest un impeded travel for through traffic Normally this is the curb lane

However, if the curb lane is frequently obstructed by traffic, or there are numerous curbside hazards the centre lane may be the best choice. When in a lane, the driver keeps to the centre of the lane and avoids wandering over the boundaries to maintain good lane selection the driver searches the traffic well ahead [12 to 15 sections and changes lanes to avoid potential hazards and obstructions.

In residential area the driver keeps th e centre of the lane. If there are no lane markings, the driver keeps to the centre of the travelled portion of the road. On a wide residential street the driver stays toward the centre of the road way from parked cars or pedestrian on the sidewalk.

Where there is short forward sight distance because of a bend in the road or hill, the driver adjusts lane position to minimize the risk of colliding with an on coming vehicle that is over the centre line. To maintain good lane position the driver searches the traffic well ahead [12 to 15 seconds] and adjusts lane position to avoid potential hazards and obstructions.

**d. Speed:** Over limit / Traffic uneven /Avoid/Obstacles

ஒவ்வொரு வீதியிலும் சட்டரீதியாக வரையறை செய்யப்பட்ட வேகத்தில் வாகனம் செலுத்துதல் வேண்டும். வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட மேகமாக செலுத்துவதோ அல்லது தேவையில்லாமல் மெதுவாக வாகனம் செலுத்துவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.


**Safety Truck**

**Training School Ltd.**

**Training & Trucking Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**

- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, ON**

ஃ கிரகப் பொருத்தம் பார்த்தல்
ஃ சுபமுகூர்த்தம் கணித்தல்
ஃ சாதகக் குறிப்பு கணித்தல்
ஃ பலன் பாத்தல்
ஃ எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்



☎: 299-8361


**Spacing:** 2-3 sec/Rear Wheels/Sides blind spots / Incoming, follow distances

முன்னால் செல்லும் வாகனங்களுக்கு இடையில் பின்னால் செல்பவர் ஒரு இடைவெளி பாதுகாப்பான முறையில் விட்டுச் செல்ல வேண்டும். வீதிகள் பிரிக்கப்படாத குடியிருப்புகளில், முக்கியமாக பத்திரங்களில் வரும் வாகனங்களுக்கிம எதிர்வரும், பின்தொடரும் வாகனங்களுக்கும் இடையில் ஒரு இடைவெளி இருத்தல வேண்டும்.

பின்னால் வருபவர் இடைவெளி விடாது தெருக்கமாக வந்து கொண்டிருந்தால் (Tailgating) சற்று விரைவு படுத்து இடைவெளியினை அதிகரித்தோ அல்லது ஓடுபாதை மாறியோ இத்தகைய நெருக்கமாக வந்து கொண்டிருப்பது என்ற நிலைமையினை கூடியளவு தவிர்ப்பதன் மூலம் விபத்தினைத் தடுத்துக் கொள்ளலாம்.

இதே போல பல ஒழுங்கைகள் உள்ள பிரதான வீதிகளில் (On a multi-lane road) பக்கத்தில் ஏனைய வாகனம் வந்து கொண்டிருந்தால் இவ்வாறு பக்கம் பக்கமாக தொடர்ந்து செலுத்திக் கொண்டிருக்கும் நிலைமையினையும் கூடியளவு இயலுமானால் தடுத்துக் கொள்ள வேண்டும். (தொடரும்)

இப் பரீட்சை மதிப்பீட்டுத் தாளின் அடுத்த பகுதிகளை அடுத்த இதழில் தொடர்வோம்) [மேற்குறிப்பிட்ட இரண்டாவது வீதிப்பரீட்சை மதிப்பீட்டுத் தாளில் உள்ள சொற் பதங்களின் விளக்கங்கள் தமிழில் தெளிவு படுத்த சிரமமான இடங்களில் ஆங்கிலத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

*மேலதிக தொடர்புகளிற்கு:சிவ பஞ்சலிங்கம்-(416) 321-0999*
*(Professional Licensed Instructor in Car & Class Room)*



# மாணவர் பகுதி



-S.F. Xavier (ஆசிரியர்)

**Answers to Tutorial 55**

June 01. 00

**Ans1.** They are 25, 26 and 27.

**Ans 2.** $2x^{2n} - 7x^{n} + 3$, $= (2x^{n} - 1)(x^{n} - 3)$

**Ans 3.** x + y = 100, [Let the be x liters of 60% and y liters of 20 %

$X \times {}^{60}/_{100} + y \times {}^{20}/_{100} = (x + y) \times {}^{50}/_{100}$, $60x + 20y = 50$

$x + y = 100$  $60x + 20(100 - x) = 100 \times 50$,

$60x + 2000 - 20x = 5000$

$40x = 3000$, $x = 75$ liters of 60%,  $y = 25$ liters of 20 %


**Ans. 4.** $V = {}^{4}/_{3} \pi r^{3}$, $= {}^{dv}/_{dt} = 4 \pi r^{2} \, {}^{dr}/_{dt}$

$\therefore 1 = 4 \times 3.4 \times 25 \, {}^{dr}/_{dt}$,  ${}^{dr}/_{dt} = {}^{1}/_{4 \times 3.14 \times 25} = .003$ cm/sec

**Ans. 5.** $x^{2} + y^{2} = 1600$,  $2x \, {}^{dx}/_{dt} + 2y \, {}^{dy}/_{dt} = 0$

$\therefore {}^{dy}/_{dt} = -{}^{x}/_{y}, {}^{dx}/_{dt}$


${}^{2}/_{2\sqrt{3}} \times {}^{30}/_{100} = .17$ m/sec.




## Tutorial 56

1. If the perimeter of a rectangle is 84 cm. What are the dimensions of a rectangle where area is least (Grade 6)
2. With 3 weeks remaining before the recycling van comes, A has collected 23 more cans than B. If B is to colloct more cans than A, he must average at least how many cans per week then A. [Grade 6]
3. How many 7 digits phone numbers are possible of the first two digits cannot be either 1 or 0.
4. In how many possible ways can a hockey team of 14 players elect a captain and an assistant captain from the group of team players.
5. Two single digit numbers (o to 9) inclusive are selected independently. Find the probably that their sum is 7.
6. The area of a $\Delta$ is increasing at a rate of 4 $cm^2$/min. and its base is increasing at the rate of 1 cm/mt. At what rate is the attitude of the $\Delta$ increasing when the attitude is 20 cm and the area is $80cm^2$

By. Mr. S.F. Xavier (Teacher)  Tel: (416) 431-6774

TUITION

அனுபவம் வாய்ந்த

B.Sc. பட்டதாரி

ஆசிரியரினால் Grade 13, வரை

Tuition வழங்கப்படும்.

PL. CALL: SRI (416) 744-7596



TUITION

அனுபவம் வாய்ந்த
தரமான முதுகலை
(M.A.) பட்டதாரி
ஆசிரியையினால்
KINDERGARDEN
இலிருந்து Grade 6 வரையிலான
பிள்ளைகளுக்கு Tution சொல்லிக்
கொடுக்கப்படும்

PL. CALL: 264-9471



TUITION

EXPERIENCED TEACHER IN MATH GIVING TUITIONS (INDIVIDUALLY AND GROUP OF NOT MORE THAN 5 IN A GROUP) IN FINITE MATH, CALCULUS AND ALGEBRA & GEOMETRY FOR O.A.C AND MATH FOR GRADE 6 -12

PL. CALL: (416) 431-6774



TUITION

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்
ஆகிய பாடங்கள் ஆரம்ப
வகுப்புகளில் இருந்து OAC வ
கனேடிய கல்வி அனுபவம்
பெற்றவரால் நடாத்தப்படுகிறது.
NEILSON / MCLEVIN

PL. CALL: Mr. & Mrs. Sharma
(416) 724-8336


### கிரிக்கெட் சுற்றுப்போட்டி முடிவுகள்

ரொறன்ரோ தமிழர் விளையாட்டுக் கழகத்தினால் Centurions Cricket Club நடாத்திய 4வது 7 பேர் /6 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி May 22, 2000 அன்று பிரபல வழக்கறிஞர் திரு. மனுவல் ஜேசுதாசன் ஆதரவில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றியைப் பெற்றுக் கொண்டது. சென். தோமஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியும் இறுதியாட்டத்தில் விளையாடி தோல்வி அடைந்தது.

சிறந்த பந்து தடுப்பாளர் N. நாதன் (சிதம்பரா கல்லூரி)
சிறந்த பந்து வீச்சாளர் - S. கிங்ஸ்லி (சென். பற்றிக்ஸ்)
சிறந்த துடுப்பாட்டக் காரன் - K. அரவிந் (சென். ஜோசப்)
ஒருங்கிணைந்த வீரர் - G. வில்லியம்ஸ் (சென். தோமஸ்)
தொடர்புகளுக்கு தமிழர் விளையாட்டு கழகம் 416 608-7762




T. S. AUTO

SPECIALIST TOYOTA HONDA

MOTOR VEHICLE SPECIALISTS

FOR COMPLETE AUTO WORKS AND DETAILING




உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும்
அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த
முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்

- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing

TUNE - UP •
BRAKES •
GENERAL MAINTENANCE •
ELECTRICAL WORKS •
ALL KIND OF REPAIRS •

OIL & FILTER CHANGE WITH CASTROL GTX




Call: Kumar

Tel: (416) 293-3395 (416) 891-2893

2305 Markham Road #24, Scarborough, Ont. M1B 2W3


## இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்னாள் ஊழியர் சங்கம்

இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்னாள் ஊழியர்களின் குடும்பத்தினருக்கான கோடைகால ஒன்று கூடலும் விளையாட்டுப போட்டியும் ஆடிமாதம் 22ந் திகதி சனிக்கிழமை காலை 9:00 மணிமுதல் மாலை 6:00 மணிவரை ரேலர் கிறீக் பாக்கில் நடைபெற உள்ளது.
மேலதிக விபரங்களுக்கு

வை. திருநாவுக்கரசு (905) 201-1566
S. தர்மராசன் 756-0848

### புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா

2000 ஆம் ஆண்டிற்கான நிர்வாகசபைத் தேர்வும் செயற்றிட்டங்களும்

புங்குடுதீவு பழையமாணவர் சங்கத்தின் புதிய ஆண்டிற்கான பொதுக்கூட்டம் மே மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 861 புறோட்வியூ வீதியில் அமைந்துள்ள தமிழீழச் சங்கப் பணிமனையில் நடைபெற்று புதிய நிர்வாகசபை உறுப்பினர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவர் திரு. சி. கிருபானந்தன்
செயலாளர்: திரு: க. சௌந்தரராஜன்
பொருளாளர்: திரு. சோம. சச்சிதானந்தன் மேலதிக தொடர்புகளுக்கு அழையுங்கள் கிருபானந்தன் (416) 289-3602
சௌந்தரராஜன் (416) 740-7687 சச்சிதானந்தன் (416) 614-6390

### மாதகல் நலன்புரிச் சங்கம்

மாதகல் நலன்புரிச் சங்க அங்கத்தவரான முன்னாள் அதிபர் திரு. சபா. அருள்சுப்பிரமணியம் அவர்கள் நெறிப்படுத்தித் தயாரித்துள்ள "தமிழ் மலர்" என்னும் தமிழ்ச் சிறார்களுக்கான ஒளியிழை ஒன்றை நாம் எதிர்வரும் யூன் மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிடவுள்ளோம்.

வெளியீட்டு விழா **தமிழ் மலர்**

திரு. சபா. அருள்சுப்பிரமணியம் அவர்கள் தயாரிப்பில் தமிழ்ச் சிறார்களுக்கான ஓர் ஒளியிழை( Video for Tamil Children)

காலம்: Jene 18, 2000 ஞாயிற்றுக்கிழமை  நேரம்: மாலை 5:00
இடம்: 30, Sewells Rd. Scarborough,  (Neilson & Sewells)
தமிழ் ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
மாதகல் நலன்புரிச் சங்கம் - கனடா

# அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்!

**ஆக்கம்: அருட்கவிமாமணி வே. செல்வநாயகம்**
**(மறைந்த யாழ். விவேகானந்தா அச்சகம் - புத்தகசாலை முதல்வர்)**

உலகிற்கோர் அன்னையென ஒளிர்கின்ற தேவி
உனையடைய வருமடியர்க் குற்றதுணை யாகி
நிலவுபுகழ் வளர்நயினா தீவிலமர் தாயே
நின்பெருமை யாரறிவர் நிமலனவன் வாமம்
குலவியமர்ந் தருளுதவிச் சமரசமும் காணக்
கொண்டவளே நாகம்மை எண்டிசையும் போற்ற
அலகிலருட் சீர்பெருகும் சித்திரங்கள் மிக்க
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்.

சிந்துபுடை சூழமணி பல்லவமென் றின்னும்
சிறந்தமணித் தீவிதுநா கேஸ்வரமே யென்னும்
வந்தநயி னார்தீவு வளர்நாக தீபம்
வளமுதவும் பெயர்நாக பூஷணியே பல்பேர்
தந்தனைநீ தரிசிக்கத் தாயவளே யுன்னைத்
தஞ்சமென வந்தடைவார் தாமடைவர் பேறு
அந்தமுத சுரபிதரும் அம்பிகையே இந்த
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்.

தெங்குநிரை பிசுமத்தம் சேர்ந்தகுளிர் சோலை
சிந்துவழி படர்காற்றுச் சிந்தைமகிழ் வூட்ட
தங்குமிவண் அஞ்சலெனத் தானபயம் காட்டித்
தண்ணருளைத் தரும்நாக பூஷணியே தாயே
இங்குவரும் மக்களவர் எந்நாளும் வாழ்வர்
இறையவனும் சக்தியின்றேல் ஏதுசெய வல்லான்
அங்கணிசெய் மணியொலிக்க ஆனந்த மூட்டும்
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்.

நிலைபெறவே குணகடலைக் கோபுரமும் பார்க்கும்
நினைப்பவர்கள் தொழுதேத்த நீளழகு சேர்க்கும்
சிலையெனவே பாம்பதுவும் பருந்ததுவும் காணச்
